# ILAKKANA ÀKKAM

THE MAKING OF TAMIL GRAMMAR IN THE CLASS ROOM FOR TAMIL TEACHERS AND PUPILS IN ELEMENTARY AND HIGH SCHOOLS

Approved by the Government.

BY

S. D. SARGUNAR, B.A.,
*Premier Tamil Pandit, St. Paul's High School*
*S. P. G., Vepery, Madras*

BRITISH INDIA PRESS, ROYAPETTAH,
MADRAS
1918

[*All Rights Reserved*] [*Price 6 Annas.*]

PRINTED AT THE
BRITISH INDIA PRESS, ROYAPETTAH,
MADRAS

# PREFACE

It does not require much thinking to realise that a competent knowledge of Tamil and its literature is indispensable to students of South Indian History, to the South Indian Government, to missionaries and others, who have to deal with the Tamilians, and to the Tamilians themselves Tamil is so rich and ancient, and its literature is so vast and wonderful, that a knowledge of them must be very useful to others too Europeans, who bestowed any attention upon Tamil, have praised it very highly "Perhaps no language," wrote Perceival, "combines geater force with equal brevity, and it may be asserted that no human speech is more close and philosophic in its expression as an exponent of the mind" Winslow said "It is not perhaps extravagant to say that in its poetic form the Tamil is more polished and exact than the Greek, and, in both dialects, with its borrowed treasures, more copious than the Latin In its fulness and power, it more resembles English and German than any other living language" Whitney observed that he was informed by "an American who was born in Southern India and grew up to speak its language vernacularly along with his English, a man of high education and unusual gifts as a preacher and writer, that he esteemed the Tamil a finer language to think and speak in than any European tongue known to

him" Tamil literature is "one, of which any nation might be proud," wrote Kellet My learned father himself has often reminded me that one of the main objects of studying Tamil literature is to know and catch the genius of the ancient Tamil people Indeed, the various kinds of elliptical constructions, in which Tamil greatly delights, the philosophic sequence of things that it always maintains inviolate, the logical and musical choice of terms, that it often makes from a veritable host of synonyms, the implied significations, that it often presents to the careful reader, the numerous and extraordinary poetic licenses, that it enjoys, and, above all, the extreme elasticity, by which it possesses a large amount of linguistic economy, and is capable of being interpreted according to the intellectual capacity of the reader, these—these alone, which none can deny it, are likely to make any one, who is rightly and faithfully devoted to its literature, a person of no mean mental powers

If the study of such a language and literature is quite worthy of earnest solicitude, it follows naturally that Tamil Grammar, which quickens and facilitates that study, equally deserves careful attention There is also another thing to strongly recommend the latter There is no easier and better method of gauging the genius and mental acumen of the ancient Tamil race than to study their science of grammar, which they have carried to a very high degree of perfection Their subtle linguistic observation, their happy invention of the wonderful sutra-device, their

logical arrangement of the rules, and their elaborate methods of construing them cannot but be the wonder of all ages. Brotherton wrote that the Tamil Nannul is "the most logically arranged grammar in the universe," but that is not the oldest, and the fullest, and the best, we have, for there exist in Tamil grammatical works far more ancient, far more voluminous, and far more famous than the Nannul

It is a pity, however, that Tamil Grammar is generally neglected both by masters and pupils in schools If it is ever taught at all, it is mostly taught very dryly and blindly A guide engaged to take a new-comer through a very interesting country may be making his own work and that of the visitor easy and expeditious, if he sits down with his charge in a certain corner, and gives him a mere oral description of the land and of the things he had observed there, but it can never be so useful and impressive to the visitor as the slow and often painful, though sometimes pleasant tour round the country, which enables the stranger to open his eyes wide and make his own observations and draw his own conclusions, with as very little help as possible from his guide Similarly, the mere giving of rules framed by others on the basis of the grammatical observations made by them, may be easier both to the teacher and the taught, but it is largely simple memory-work, and fails to draw out the discerning powers of the young mind, and to cultivate an independent and investigating spirit so essential to the study of

grammar. My great love and admiration for Tamil literature and its grammar, my long experience in teaching them, and the importance that was recently attached to Tamil grammar in the S S L C Examination, have all prevailed on me to publish in the following few pages my most homely and intelligent method of teaching and learning Tamil Grammar quite successfully. Assuming for the nonce that there is no cut and dry science of grammar yet in Tamil, the master and his pupils are supposed to confer together to make language observations and analysis, and invent names for the various findings and peculiarities, that come to their notice, the master, of course, playing only a subordinate part, because, though as the president of the class he enjoys full powers to guide, question, and oversee it, he can only withhold his assent to any of the names or measures proposed, but can never come forward with any open suggestions of his own

A few of my deviations may require some explanation The grammar of nouns, verbs, and particles precede the grammar of letters for the simple reason that children learn to utter names and sentences before they are taught letters Seeing that not only children but also many grown-up people all over the Tamil world confound the sounds of some letters, Tamil phonetics has been introduced to a certain extent, and the pupils must be made to feel the particular part of the vocal chamber, where a letter takes its rise, and also the particular organs that come into play

when that letter is correctly pronounced Mirrors may also be used here at the discretion of the master A knowledge of initials and finals will be helpful in tamilifying foreign words to suit the genius of Tamil The different doubling and coalescing of letters will enable pupils to spell many words correctly But the various changes that words and letters undergo for the sake of metre, and the different kinds of words and devices that specially belong to poetry, can be studied with advantage only after Tamil prosody has been learned a little, and they have been omitted in this elementary work The modifications of sounds, and consequently of letters, that occur when words blend together, have nothing artificial about them, and the young ones are asked to pronounce words rapidly two by two and observe the vocal changes well, and record them faithfully, all difficult cases and inferences are reserved for a future stage To avoid all prepossessions on the part of the pupils, the contents and the lesson headings are omitted, and only an Index is placed at the end Masters may very freely supplement questions, and, especially exercises, but they should never deprive the pupils of their "sacred right of discovery"

Learned and indulgent reader, the little book is now before you, and please

"Be to her virtues very kind,
Be to her faults a little blind"

St Paul's High School,
S P G, Vepery,
Madras

S D SARGUNAR

# முகவுரை

தனது சுயபாஷையை அலக்ஷியஞ்செய்கிற எந்த ஜாதியும் சீக்கிரத்தில் நிர்மூலமாய்ப் போய்விடும் என்றும், எத்தனை அந்நிய பாஷைகளில் எவ்வளவு பாண்டித்திய முடையவனாயினும் தனது சுயபாஷையை நன்றாய்ப் படியாத எவனும் பெரியவன் அல்லது கல்விமான் என்று சொல்லப்படுவதற்குக் கொஞ்சமும் அருகனல்ல என்றும், தமிழர்கள் தமது சுயபாஷையை எவ்வளவுகாலம் அலக்ஷியஞ்செய்கிறார்களோ அவ்வளவுகாலமும் அவர்களை உள்ளபடி நாகரிகம் அடைந்தவர்களாகச் சொல்வதற்கில்லை என்றும், மிகப்பெரிய பல ஐரோப்பிய ஆசிரியர்களும் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால், தமிழ்ஜாதியை நிலைநிறுத்தவும் தமிழருக்குப் பெருமையையும் நாகரிகத்தையும் உண்டாக்கவும் உழைத்துவரும் புண்ணியபுருஷரில் தமிழாசிரியரும் மிக முக்கியமானவரே என்பதை அறிவுடையார் எவரும் மறுக்கத் துணியார். இவ்வுண்மையை முற்றுமுணர்ந்த கூரிய மதியுடைய நல்ல தமிழாசிரியர் ஒருபோதும் கூலிக்கு அழுவது போலிராது, தமது வேலையையும் தமது தேசகைங்கரியமாக மதித்து அதை மிகமனப் பூர்த்தியாய்ச் செய்யும் பெருவிரத முடையவரா யிருப்பது மல்லாமல், கல்வியும் அநுபவமும் முற்றமுற்ற அவற்றிற்கு ஏற்றபடி நெகிழ்ந்து நடக்கும் ஆற்றலையும், பாடஞ்சொல்லும் பழய முறைகளிலும் சிறந்தமுறை ஏதாவது கிடையாதா என்னும் ஆவலையும், பெரிதும் உடையராவர். அப்படிப்பட்ட சிறந்த நல்லாசிரியருக்கும் அவரிடம் கல்விபயிலும் திருவுடையவருக்குமே மிகப்பயன் படுமாறு இச் சிறுநூல் எழுதப்பட்டது.

முன் முகவுரையிற் கூறிய பலவிஷயங்களையும் காகிதப் பஞ்சத்திற்குப் பெரிதுமஞ்சி இங்கு விடுத்தேன், என்றாலும் அவ்விஷயங்கள் எல்லாரும் அறியத்தக்கவையே.

ச. த. ச.

# இலக்கண ஆக்கம்.

## பாகம் 1.

---

### பாடம் 1.

1 பெரிய நகரங்களில் வீடுகளுக்கு இலக்கமிட்டிருப்பது ஏன்?

2. வகுப்பிலுள்ள பிள்ளைகளுக்கெல்லாம் பெயரில்லாமலிருந்தால் என்ன நேரிடும்?

3. ஒரு பொருளைப்பற்றிப் பிறருக்கு நாம் ஏதாவது சொல்ல விரும்பினால் அப்பொருளைக் கையாற் காட்டிச் சொல்லவேண்டியதைச் சொல்லிவிடலாமே, பின் ஏன் அதற்குப் பெயர்வேண்டும்?

4. எதிரிலிருக்கும் சில பொருள்களின் பெயர்களைச் சொல்லுங்கள்.

5. வேறு இடங்களில் நீங்கள் கண்ட சில பொருள்களின் பெயர்களைச் சொல்லுங்கள்.

6 பொருள்களின் பெயர்கள் ஆகிய இப்படிப்பட்ட சொற்களுக்கு நாம் என்ன பெயர் வைத்துக் கொள்ளலாம்?

7. பின்வரும் ஒவ்வொன்றிலுமுள்ள பெயர்ச் சொற்களைக் காட்டுங்கள்.—

(1) புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.
(2) எறும்பு ஊரக் கல்லுங் குழியும்.
(3) மயில் சிறகை விரித்து ஆடும்.
(4) பாண்டியர் காட்டிற் புகுந்தார்.

(5) தாயில்லாப் பிள்ளை பொலியும்.

(6) ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி.

(7) அகத்தியர் மாணாக்கர் பன்னிருவரில் தொல்காப்பியர் ஒருவர்.

(8) வாளைக் கையிற்கொடுத்து மகனை அனுப்பினான்.

(9) இராமன் கடலைக் கடந்து இலங்கைக்குப் போய் இராவணனைக் கொன்று சீதையை மீட்டான்.

(10) ஏமாங்கத நாட்டில் இராசமாபுரியில் சச்சந்தன் என்னும் அரசனுக்கு விசையை வயிற்றிற் பிறந்த மகன் சீவகன்.

பெயர்ச்சொல் என்றால் என்ன?

## பாடம் 2.

1 பாக்கு, தேங்காய், நுங்கு இவை ஒவ்வொன்றும் எதில் உண்டாகின்றன? இப்பொருள்களைத் தருகின்றவற்றிற் கெல்லாம் பொதுப்பெயர் என்ன?

2. ஆடு, எருது, யானை, குதிரை இவற்றையெல்லாங் காட்டக்கூடிய பொதுப்பெயர் ஒன்று சொல்லுங்கள்.

3. பறவைகள் என்னும் பொதுப்பெயரில் அடங்கிய சில சிறப்புப் பெயர்கள் எவை?

4. சில பூக்களின் சிறப்புப் பெயர்களைச் சொல்லுங்கள்.

5. கறுப்பு, சிவப்பு, வெண்மை, பசுமை இவற்றிற்குப் பொதுப் பெயர் ஒன்று வேண்டும்.

6. சில பாம்புகளின் சிறப்புப் பெயர்கள் எவை?

7. நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் சிறப்புப் பெயரைச் சொல்லுங்கள். உங்களெல்லாருக்கும் உரிய பொதுப்பெயர் என்ன?
8. பொதுப்பெயர், சிறப்புப்பெயர் என்பவை என்ன?

---

## பாடம் 3.

1. காற்சட்டை, கைச்சட்டை, உடுப்பு, உட்சட்டை கழுத்துக்கட்டு இவற்றிற் பொதுப்பெயர் சிறப்புப் பெயர்களைக் காட்டுங்கள். அப் பொதுப் பெயர் ஏதாவது காரணத்தால் இட்டபெயரா, இல்லையா? அச் சிறப்புப் பெயர்கள் ஒவ்வொரு காரணத்தால் வந்த பெயர்களா இல்லையா?
2. ஒரு காரணத்தால் வந்த பொதுப்பெயருக்கு என்ன பெயர் சொல்லலாம்? ஒரு காரணத்தால் வந்த சிறப்புப்பெயருக்கு என்னபெயர் சொல்லலாம்?
3. வானம்பாடி, பறவை, கரிக்குருவி, மீன்கொத்தி, காகம், மாடப்புறா இவற்றிற் காரணப் பொதுப் பெயர், காரணச் சிறப்புப் பெயர்களைக் காட்டுங்கள்.
4. அந்தந்த வீட்டுத் துணிகளை எளிதில் அறியும்படி வண்ணான் என்ன செய்கிறான்? உங்கள் வீட்டுத் துணிகளுக்கு உங்கள் வண்ணான் இடும் குறிகள் என்ன? உங்கள் வீட்டுத் துணிகளுக்கு அவ்வகையான குறி அவன் இடுவது என்ன காரணத்தால்? பல பொருள்களிலிருந்து ஒரு பொருளை எளிதில் அறிவதற்கு வண்ணான் இடுகுறிபோன்ற காரணங் காட்டாப் பெயர்களுக்கு என்ன பெயர் வைக்கலாம்?

5. கல், மண், தீ, நாற்காலி, கோழி, பூ, பானை, இலை, பல, ஊர்வன, கண் இவற்றிலுள்ள இடுகுறிப் பெயர்களையும் காரணப் பெயர்களையும் காட்டுங்கள்.

6. மா, பலா, வாழை, பனை, மரம், புலி, மிருகம், யானை, பன்றி, வில், வாள், கருவி இவற்றில் இடுகுறிப் பொதுப் பெயர்களையும் இடுகுறிச் சிறப்புப் பெயர்களையும் காட்டுங்கள்.

7. ஆறுமுகம் என்பது முதலாவது யாருடைய பெயர்? அது அப்போது இடுகுறிப்பெயரா, காரணப்பெயரா? அப்பெயரை அநேகருக்கு இடுகிறார்களே அப்போது அது இடுகுறிப்பெயரா, காரணப்பெயரா? இவ்வாறு காரணப்பெயர் இடுகுறிப் பெயராக வருவதற்கு என்ன பெயர் வைக்கலாம்?

8. பின்வருபவற்றில் இடுகுறிப் பொதுப்பெயர், இடுகுறிச் சிறப்புப்பெயர், காரணப் பொதுப்பெயர், காரணச் சிறப்புப்பெயர், காரண இடுகுறிப் பெயர் இவற்றைக் காரணத்தோடு காட்டுங்கள் —பெற்றோர், மூத்தவன், இளையவன், சுற்றத்தார், உமாபதி, சீதாபதி, நீலகண்டன் (பிள்ளைகள் பெயர்கள்); வானத்தவர், நான்முகன், கங்காதரன், பார்த்தசாரதி, யானைமுகன், ஆறுமுகன் (தேவர் பெயர்கள்), கை, காது, நா, உறுப்பு; பார்ப்பார்; கொல்லர், காற்றாடி, நாற்காலி.

றிப் பொதுப்பெயர் என்றால் என்ன? அப்படியே மற்ற நான்கு பெயர்களையும் பற்றிச் சொல்லுங்கள்.

## பாடம் 4.

1 கண்ணாடித் துண்டாகிய இப்பொருளுக்குள்ள சில பண்புகளை, அதாவது குணங்களை, சொல் லுங்கள்.

2. காகிதத்திற் சுற்றி நூலாற்கட்டிய இக்கண்ணாடித் துண்டை எடுத்து நூலையுங் காகிதத்தையும் உங் களில் யார் பிரித்துவைக்கக் கூடும்? இப்படியே மேற்சொன்ன பண்புகளைக் கண்ணாடித் துண்டி லிருந்து யார் கண்காணப் பிரித்துவைக்கக் கூடும்?

3. அப்பொருளைவிட்டுத் தனியாகக் கண்காணப் பிரிக் கமுடியாத பண்புகளை நாம் பின் எப்படி யறி கிறோம்?

4. ஒரு பொருளினுடைய பண்புகளின் பெயரான சொற்களுக்கு என்னபெயர் சொல்லலாம்?

5. பின்வரும் சொற்களிற் பண்புப் பெயர்களை மாத்தி ரம் காட்டுங்கள் —மரம், வீரம், ஒளி, வளம், குரங்கு, பெருமை, உண்மை, புல், சிவப்பு, அன்பு, பலம், ஒன்று, நூறு, முட்டை, நன்றி, ஞானம், கல், முக்கால்.

6. பின்வரும் அர்த்தங்களையுடைய ஒவ்வொரு பண் புப்பெயர் கூறுங்கள் — சிறிதா யிருக்கும் தன்மை, ஒரு பொருளாயிருக்கும் தன்மை, பல பொருளாயிருக்கும் தன்மை, ஒன்றாயிருக்கும் தன்மை, வேறாயிருக்கும் தன்மை, தானாயிருக் கும் தன்மை.

7. கருமையாகிய நாகம், பலவாகிய பேச்சு, மூன்றாகிய கண் இவை ஒவ்வொன்றையும் அர்த்தம் மாறு

மல எவவாறு தொகை, அதாவது சுருக்கம், ஆககலாம்? தொகை வரும்படி ஒவ்வொன்றி லும் நீஙகள் விட்டுவிட்ட சொறகள் எவை? கருமை, பல, மூனறு இவை என்ன சொறகள்? பணபுப் பெயாகளுககுப் பின இம்மாதிரியான தொகை வநதால் அததொகைககு எனனபெயா வைககலாம்?

8 செந்தாமரை, பெருங்கடல், ஒரு வீரன், நெடுந தூரம், காற்பணம் இவை பணபுத தொகைகள ஆகுமா? என்?

9 பண்புத தொகைகள் வேறு பததுவேணடும்.

10. பண்புத தொகையில் எது விடப்பட்டிருக்கும?

11 நாகமாகிய பாம்பு, பாணடியனுகிய அதிவீரன, இவறறைத தொகையாககுஙகள. இவறறிலும நீங்கள் விட்டுவிட்டது எது? இவை எனன தொகை? நாகபபாமபு என்பதில நாகம எனன பெயா, பாமபு எனனபெயர்? பாண்டியன அதி வீரன எனபதில பாணடியன என்னபெயா, அதிவீரன் எனனபெயா? இப்படிப் பொதுப் பெயா, சிறபபுபெயர் ஆகிய இருபெயா ஒட்டு, அதாவது சோநதுளள, பண்புத தொகைககு எனன பெயர்சொலலலாம?

12. பதது இருபெயரொட்டுப் பண்புத தொகையும சொல்லுஙகள.

13. பணபுப் பெயர், பணபுத்தொகை, இருபெயரொட டுப பணபுத்தொகை, இவறறை விளக்கிக் காட டுஙகள்.

14. பெயர்ச் சொல்லுக்கும் பண்புச் சொல்லுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் எவை?

---

## பாடம் 5.

1. பாடுதல், வெட்டல், நடத்தல் இவை எவற்றினுடைய பெயர்கள?
2. பொருள்களின் தொழிலைக்காட்டும் பெயர்ச்சொற்களுக்கு என்னபெயர் சொல்லலாம்?
3. கெடுதல், சுடுதல் என்னும் தொழிற்பெயர்கள் எந்த எந்தச் சிறு சொற்களிலிருந்து உண்டானவை? இச்சொற்கள் அச்சொற்களில் எங்கு நிலை கொண்டிருக்கின்றன? பெரிய சொற்களில் இப்படி முதல் நிலைகொண்ட சிறு சொற்களுக்கு என்னபெயர் கூறலாம்? முதல் நிலை என்பதை விரைவாக உச்சரித்து அந்த உச்சரிப்பின்படி அதை எழுதுங்கள். கெடுதல், சுடுதல் என்பவற்றில் கெடு, சுடு என்னும் முதனிலைகள் தவிர இருப்பன எவை? அவை அத்தொழிற் பெயர்களில் எங்கு நிலை கொண்டுள்ளன? பெரிய சொற்களில் இப்படிக் கடை நிலைகொண்ட சிறு சொற்களுக்கு என்ன பெயர் கூறலாம்?
4. பின்வரும் தொழிற்பெயர்களில் முதனிலை கடைநிலைகளைக் காட்டுவதுமல்லாமல், அக்கடை நிலைகளை யுடைய வேறு சிலதொழிற் பெயர்களும் சொல்லுங்கள் —

ஆடல், செய்யுள், வகை, வேக்காடு, போக்கு, ஈகை, தேர்ச்சி, வியாத்தல், மறதி, கற்பு, கடவுள், வரத்து, பொறுமை, கல்வி, பார்வை, ஓட்

டம், சாவு, விக்குள், வரவு, தூக்கம், எச்சம்.

5. நட, கல், செல், செய், வா, படர் இவை ஒவ்வொன்றிலிருந்தும் உண்டான வெவ்வேறு கடைநிலைகளையுடைய தொழிற் பெயர்கள் நாலு சொல்லுங்கள்.

6. அதைக் கெடுதலாக நினையாதே என்பதில் தொழிற்பெயர் என்ன? அதைக் கெடுவாக நினையாதே என்பதில் அந்த தொழிற்பெயர் எது கெட்டு எது மாத்திரம் நிற்கிறது? இப்படிக் கடை நிலை போய் முதனிலைமாத்திரம் நிற்கும் தொழிற் பெயர்களுக்கு என்ன பெயர் வைக்கலாம்? அதைக் கேடாக நினையாதே என்பதில் கெடுதல் என்னும் தொழிற்பெயர் என்ன என்ன மாறுதலடைந்து கேடு என்று வந்தது? இப்படி முதனிலை திரிந்த தொழிற்பெயருக்கு என்ன பெயர் சொல்லலாம்?

7. பின்வரும் தொழிற்பெயர்கள் முதனிலைத் தொழிற் பெயர்களாக வரும்போதும் முதனிலை திரிந்த தொழிற்பெயர்களாக வரும்போதும் எப்படி நிற்கும்? :—

விடுதல், படுதல், அடுதல், இடுதல், அறுதல், அழுக்கறுதல், கையறுதல், உடன்படுதல், வழி படுதல், மேற்கொள்ளுதல், உட்கொள்ளுதல், வியங்கொள்ளுதல்.

8. தொழிற்பெயர் என்பது என்ன? பலவிதமான தொழிற்பெயர்களையும் விவரித்துக் காட்டுங்கள்.

9. தொழில் என்னும் அர்த்தத்தில் வருகிற சில வார்த்தைகளைச் சொல்லுங்கள்.

## பாடம் 6.

1. நடந்தவன், நடக்கிறவன், நடப்பவன், போனவள், போனவை, போனது, பெற்றார், நடந்தேனை, வந்தேனுக்கு, நடந்தாரை, நடந்தாருக்கு, நடந்தாரக்கு, நடந்தவாகது இவை பண்புகளின் பெயர்களா, தொழில்களின பெயர்களா, வினைகளோடு கூடிய பொருள்களின் பெயர்களா?

2. வினையால அணைந்த, அதாவது கூடிய, பொருளக ளின் பெயர்களாகிய இவற்றை என்ன பெயர் கள என்னலாம?

3 படித்தவன், படித்தவள என்பவற்றில் முதனிலை கடைநிலைகள் எவை? படித்தவன், படித்தவள என்பன எந்த பகுதியிலிருந்து, அதாவது மூலச சொலலிலிருந்து, வந்திருக்கின்றன? ஆகையால் முதனிலைக்கு வேறு என்ன பெயா சொல்லலாம்? படித்தவன், படித்தவள என்பன இரண்டும ஒரேமாதிரியான பொருளகளைக காட்டுகின்றனவா? வித்தியாசமான பொருளக ளைக காட்டுகின்றனவா? இரண்டிற்கும பகுதி ஒன்றுதானே. அப்படியிருக்க விகுதி, அதாவது வித்தியாசம், உள்ள பொருள்களை இவை காட்டு கினறன என்று எப்படித தெரிகிறது? விகுதி யைக் காட்டும இசசிறு சொறகளுககு என்ன பெயா சொல்லலாம்? கடைநிலைககு வேறு பெயர் என்ன?

4. வினையாலணையும் பெயாகள் இருபது சொல்லி அவற்றிற் பகுதி விகுதிகளைக் காட்டுங்கள.

5. வினையாலணையும் பெயர்கள் என்றால் என்ன? அவற்றிற்கும் தொழிற் பெயருக்கும் உள்ள ஒரு வித்தியாசத்தைச் சொல்லுங்கள்.
6. முதனிலை கடைநிலைகள் என்றால் என்ன? அவற்றைப் பகுதி விகுதிகள் என்பது ஏன்?

## பாடம் 7.

1. ஏதாவது ஒரு பொருளை, அல்லது பண்பை, அல்லது தொழிலை, அல்லது வினையாலணைந்த பொருளை மனத்தில் நினைத்துக்கொண்டு பின் அதன் பெயரைச் சொல்லுங்கள். இப்போது அதைப்பற்றி ஏதாவது ஒரு விஷயம் சொல்லுங்கள்.
2. இப்படி மனத்தில் எழுந்த ஒன்றைப்பற்றி ஒரு விஷயம் சொன்னால் அப்படிச் சொன்ன வாக்குக்கு என்ன பெயர் வைக்கலாம்?
3 ஒன்றைப்பற்றி ஒன்று சொல்லும்போது மனத்தில் முதலாவது எழுவது அதன் நினைவா, அல்லது அதைப்பற்றிய விஷயமா?
4. அப்படி மனத்தில் முதலாவது எண்ணம் எழும் வாயாக, அதாவது இடமாக, இருப்பதின் பெயருக்கு வாக்கியத்தில் என்னபெயர் வைக்கலாம்?
5. முதலாவது கேள்விக்கு உத்தரவாக நீங்கள் சொன்ன வாக்கியத்தில் நீங்கள் மனத்தில் நினைத்துக்கொண்டதைப்பற்றிய பயன், அதாவது விஷயம், எங்கே நிலைத்திருக்கிறது? வாக்கியத்தில் அப்படி ஒன்றைப்பற்றிய ஒரு பயனை நிலைகொண்டுள்ள சொல்லுக்கு என்ன பெயர்?

வைக்கலாம் ? அப்பெயரை விரைவாக உச்சரித்து அந்த உச்சரிப்பின்படி அப்பெயரை எழுதுங்கள்.

6. எழுவாயில்லாத வாக்கியமும், பயனிலை இல்லாத வாக்கியமும் உண்டா ? ஏன் ?

7. போ, நாளை வா, நேற்று வந்தான், இவை வாக்கியங்கள் ஆகுமா ? ஏன் ?

8. வாக்கியத்தில் எழுவாய் தோன்றாமலிருந்தால் அந்தத் தோன்றா எழுவாய்க்கு என்னபெயர் சொல்லலாம் ?

9. பின் வாக்கியங்களில் எழுவாய் பயனிலைகளைச் சுட்டுங்கள் —

(1) மன்னன் வாழ்க.
(2) அரசன் நெல்லையும் நீரையும் பார்க்கிலும் மிக அவசியம்.
(3) நீ யார் ?
(4) படித்தவர்களைப் படித்தவர்களே விரும்புவார்கள்.
(5) இளமையிற் கல்
(6) சூதும் வாதும் வேதனை செய்யும்.
(7) ஆறுவது சினம்.
(8) அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
(9) ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
(10) நோன்பு என்பது கொன்று தின்னாமை
(11) மாரியல்லது காரியமில்லை.
(12) உண்டிக்கழகு விருந்தோடுண்டல்.
(13) கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு.

(14) எமது குலதெய்வம் ஆவார் இவரே
(15) இரப்பவர்க்கு இட்டு உண்ணுங்கள்.

10. பெயர்ச்சொற்களும் வாக்கியங்களுக்குப் பயனிலை யாகுமோ? ஆகுமானால் உதாரணம் வேண்டும்.

11 வாக்கியம் என்பது என்ன? எழுவாய், பயனிலை என்பவை எவை? அவற்றிற்கு அப்பெயர் வந்ததற்குக் காரணம் என்ன?

---

## பாடம் 8.

1. அவன் வீடு கட்டினான் என்பதில் வீடு என்பது எதைக் காட்டுகிறது? அவன் வீடு பட்டினி என்பதில் வீடு என்பது எதைக்காட்டுகிறது? வீடு என்பது முதலாவது எதனுடைய பெயர்? பின் அது எதற்குப் பெயராயிற்று? அது காட்டுகின்ற முதலாவது பொருளுக்கும் அது காட்டுகின்ற இரண்டாவது பொருளுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா?

2. அவள் தலை பெரியது, அவள் அவிழ்ந்த தலை கட்டினாள் என்னும் வாக்கியங்களில் முதலாவது தலை என்னும் சொல் எதைக் காட்டுகிறது, இரண்டாவது தலை என்னும் சொல் எதைக் காட்டுகிறது? இச்சொல் காட்டுகின்ற இரண்டு பொருள்களுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா?

3. வீடு, தலை என்பன முதலாவது எவற்றினுடைய பெயர்கள்? பின் சம்பந்தமுடைய எவற்றிற்குப் பெயர்களாகி வந்தன? இப்படி ஒரு பொருளின் பெயர் அப்பொருளோடு சம்பந்தமுடைய வேறொரு பொருளுக்குப் பெயர் ஆகும்போது

அப்படி ஆகுபெயருக்கு என்னபெயா வைகக லாம்? எநத வாககியஙகளிலுளள வீடு என பதும தலை எனபதும் ஆகுபெயாகள?

4\. பின இரட்டை இரட்டையாக வருகிற வாக்கியங களில் எது ஆகுபெயா எனறு காரணத தோடு காட்டுஙகள்.—

(1) ஊா ஒன்று கூடிறறு. ஊா பெரியது

(2) தாமரை பூவிற சிறநதது. தாமரை சேற றில் முளைககும்.

(3) வெறறிலை தின்றான். வெறறிலை நடடான.

(4) அவன் வறறல உணடான அககுளம ஒருநாளும வறறல இலலை.

(5) [illegible]ன படுககையைச சுருடடு. பகலி[illegible] படுககை நல்லதல்ல

(6) குடம் உடைநதது. அவன் ஒரு குடம குடிததான.

(7) தலைககுக குடைவேணடும. தலைககு இர ணடு பழம் கொடு.

(8) இவ்வூாப்படி [illegible] யது. வேளைககுப பா[illegible]

(9) வண்டி ஓடுகிறது. பதது வணடி விளை தும் பட்டினி.

(10) பறவை பாடுகிறது பறவையில்லாத இளஙகுஞசு இது.

(11) நெல்விளைநதது. நெல அறுததான.

(12) மாதம் நாலுவீசை கரைககிறான. வீசை நாறபது பலம.

(13) வாய் கொப்பளித்தான். இரண்டு வாய் தின்றான்.

(14) உழப்பது நாழி. புது நாழி வாங்கினான்.

(15) பட்டினத்தார் கல்விமான். பட்டினத்தார் என்ன விலை?

(16) நாய்க்கு நா நீளம். நல்லோர் நா ஒரு நாளும் புரளாது.

(17) செம்பு பஞ்சலோகத்தில் ஒன்று. செம்பு நிறையப் பால் கற.

(18) ஒன்றில் பாதி அரை. அரை வீங்கியிருக்கிறது.

(19) உடன் பிறப்பு இல்லா உடல் பாழ் பல முறை பிறப்பு உண்டாகும் என்பர் பலர்

(20) சுண்டல் உண்டான். காயை வெயிலில் வைத்தால் நீர்ச்சுண்டல் உண்டாகும்.

5. ஆகு பெயர்கள் உள்ள ஐந்து வேறு வாக்கியங்களைச் சொல்லுங்கள்.

6. ஆகு பெயராவது என்ன?

---

## பாடம் 9.

1. வீரன் என்பதை எழுவாயாக உடைய ஒரு வாக்கியமும் எருது என்பதை எழுவாயாக உடைய ஒரு வாக்கியமும் சொல்லுங்கள். இந்த வாக்கியங்களிலுள்ள பயனிலைகளை ஒன்றுக்கொன்று மாற்றிக்கொள்ளலாமா? ஏன்?

2. மேலே சொல்லிய இரண்டு பயனிலைகளில் எது மிருகம், பறவை, மீன், உடம்பு, மரம், கல் என்

பலவற்றிற்குத் தனித்தனியாகப் பயனிலை யாக லாம்?

3 ஆகையால் மேற்சொல்லிய பெயர்களையுடைய பொருள்களில் எவையெல்லாம் ஒரே திணையை, அதாவது இனத்தை, சேர்ந்தவை என்று தெரிகிறது? அந்தத் திணையைவிட உயர்ந்த திணையைச் சேர்ந்த பொருளைக் காட்டும் பெயர் மேலே எது?

4. வீரன் எனும் உயர்திணைப் பொருளின் பெயரை என்ன பெயர் என்னலாம்? (உயர்திணை) அல்(லாத) திணையைச் சேர்ந்த மற்றப் பொருள்களின் பெயர்களுக்கு என்ன பெயர் சொல்லலாம்? அல்திணை என்பதை விரைவாக உச்சரித்து அந்த உச்சரிப்பின்படி அவ்வார்த்தையை எழுதுங்கள்.

5. உயர்திணைப் பெயர்கள் பத்தும் அஃறிணைப் பெயர்கள் பத்தும் சொல்லுங்கள்.

6. உயிர், உடம்பு, தெய்வம், குழந்தை இவற்றை எழுவாயாகத் தனித்தனி வாக்கியங்களில் வைத்துப் பார்த்து இவை என்ன திணைப்பெயர்கள் என்று சொல்லுங்கள்.

7 திணை என்றால் என்ன? அதன் வகைகளையும் விவரித்துக் காட்டுங்கள்.

8. ஒரு வாக்கியத்தில் எழுவாயும் பயனிலையும் ஒரே திணையிலிருக்கவேண்டுமா, வேறுவேறு திணைகளிலும் இருக்கலாமா?

## பாடம் 10.

1. சில வேளைகளில் படித்தவர்களும் மெய்ப்போய் வந்த நல்ல பசுவைப் பார்த்து அம்மை வந்தாள் என்கிறார்களே அப்போது எந்தத் திணைக்கு எந்தத் திணை வழு, அதாவது தப்பு, ஆக வந்தது? என்ன காரணத்தால் அந்தத் திணை வழு வந்தது? இப்படிப்பட்ட திணைவழுவை எல்லாரும் அமைத்து, அதாவது பொறுத்து, வைத்துக் கொள்ளுகிறார்களே, இந்தத் திணை வழு அமைதிக்கு என்ன பெயர் வைக்கலாம்?

2. பின் வாக்கியங்களிலுள்ள திணைவழு அமைதியை எடுத்துக் காட்டி, எக்காரணங்களால் அவை வந்தன என்று சொல்லுங்கள்.—

(1) இது குரங்கு (துஷ்டப் பையனைப் பார்த்துச் சொன்னது.)

(2) போடா முண்டம். (அறிவில்லாதவனைப் பார்த்துச் சொன்னது.)

(3) நல்லபையன் இவன் (நல்ல நாயைப்பார்த்துச் சொன்னது.)

(4) கல்லாதவனே நல்ல மரம்.

(5) அவன் ஒரு அசங்கியம்

(6) நாலடியார் நன்றுப்பபடி.

(7) என் கரும்பே வாடா (மகனைப் பார்த்துச் சொன்னது.)

(8) அரசன் உலகத்திற்கு உயிர்.

(9) அவன் எப்போதும் ஒரு இழவு.

(10) புருஷனே மனைவிக்குச் செல்வம்.

(11) அந்தக் குதிரை நல்ல வேலைக்காரன்.

3 என்ன என்ன காரணங்களால் திணைவழு அமைதி வரும்? ஒவ்வொரு வேறு உதாரணம் காட்டுங்கள்.

4 திணைவழு அமைதி என்பது என்ன?

## பாடம் 11.

1 மகன் என்னும் எழுவாய்க்கு ஒரு பயனிலை சொல்லுங்கள். மகள் என்னும் எழுவாய்க்கு ஒரு பயனிலை சொல்லுங்கள். இந்தப் பயனிலைகளை ஒன்றுக்கொன்று மாற்றிக்கொள்ளலாமா? ஏன்?

2 மக்கள் என்னும் எழுவாய்க்கு ஒரு பயனிலை சொல்லுங்கள். முதலாவது கேள்வியில் வந்த பயனிலைகளில் எதாவது இதற்குப் பொருந்துமா? ஏன்?

3 மேலே வந்துள்ள மூன்று எழுவாய்களும் என்ன திணைப்பெயர்கள்?

4 அந்த மூன்று உயர்திணைப் பெயர்களில் மகன் என்பது எந்தப் பாலை, அதாவது வகுப்பை, சேர்ந்த பொருளின் பெயர். மகள் என்பது எந்தப் பாலைச் சேர்ந்த பொருளின் பெயர்? ஆண்பாலைக் காட்டும் உயர்திணைப் பெயரை என்ன பெயர் என்னலாம்? பெண்பாலைக் காட்டும் உயர்திணைப் பெயரை என்ன பெயர் என்னலாம்?

5 மக்கள் என்பது எத்தனை பொருளைக் குறிக்கிறது? அப்பொருள்கள் எந்தப் பாலைச் சேர்ந்தவை? இப்படிப் பலரைக் காட்டும் பெயரை என்ன பால் உள்ள பெயராகச் சொல்லலாம்?

6. ஆண்பால், பெண்பால், பலர்பால் என்னும் மூன்று பால்களும் எந்தத்திணையைச் சேர்ந்தவை? இம்

மூன்று பால்களிலும் ஒரு பொருளாயிருக்கும தன்மையைக் காட்டும் பால் எவை, பல பொரு ளாயிருக்கும் தன்மையைக காட்டும் பால் எது? ஒரு பொருளாயிருக்கும் தனமை, பல பொருளா யிருக்கும் தனமை இவறறிறகு ஒவ்வொரு சொல என்ன? உயர்திணை ஒருமைப் பால எவை, உயர்திணைப் பன்மைப்பால் எது?

7 எருது, பசு, மாடுகள் இவை என்ன திணைப் பெயா களா? இவற்றிற்குத தனிததனியாகப் பயனிலை கள் சொல்லுங்கள். இந்த மூன்று பெயாகளில ஆணைக்காட்டும் பெயர் எது? பெண்ணைக் காட்டும் பெயர் எது? அப்படியானல் மகன் வந தான், மகள் வந்தாள் என்றதுபோல, எருது வந தான், பசு வந்தாள் என்று சொல்லலாமா? ஆண பால், பெணபால் எந்தத திணைககு இல்லை, எந தத திணைககு உண்டு என்று இதிலிருந்து தெரி கிறது?

8 எருது வநதது, பசு வநதது என்று சொல்லுகிற வாகள் மாடுகள் வந்தன என்று சொல்வதற்குக காரணம் என்ன? வாக்கியததில் ஆணபால பெண்பால்களை அஃறிணையில கவனியாமற போனாலும் எதைக் கவனிப்பதாக இதிலிருநது தெரிகிறது? எருது, பசு, மாடுகள் எனபவற றில ஒன்றனைக் குறிக்கும் பாலைசசோநத பெயா கள் எவை? பலவற்றைக் குறிக்கும் பாலைச சேர்ந்த பெயர்கள் எவை? ஒன்றன் பாலைச சேர்ந்த பெயர்களை என்ன பாறபெயாகள எனன லாம்? பலவின் பாலைச் சேர்ந்த பெயாகளை

என்ன பாற்பெயர்கள் என்னலாம்? எருது, பசு, மாடுகள் என்பவற்றில் ஒன்றன் பாற் பெயர்களும் பலவின்பாற் பெயர்களும் எவை?

9. அஃறிணைக்குரிய பால்கள் எவை? அவற்றில் ஒருமைப்பால் எது, பன்மைப்பால் எது?

10. பின்வரும் சொற்களின் பாலைக் கூறுங்கள் :— நாய், அவன், அவை, போனவை, போயிற்று, வந்தார், நின்றான், அது, எவர், படித்தான், கூவிற்று, புலிகள், நாய், அரசிகள், தோழி, புலவர்.

11. பெண்பாற் பெயர்கள் சொல்லுங்கள்.— தலைவன், சத்திரியன், எடா, உழவன், பகைவன், தொழும்பன், பெருமான், விருத்தன், மணவாளன், பிரியன், தனயன், புருஷன், பிதா, ஆடூஉ, நம்பி, களிறு, கரும்பு, புலையன், கிழவன், தாயினன, இந்திரன், சிறுவன், முடவன், தம்பி, பார்ப்பான், சம்பு, சீமான், பிரான், கூத்தன், தேவாளன், ஐயன், சிவன், துஷ்டன், பகவன், கொற்றவன், அரசன்.

12. ஒருமைப்பாற் பெயர்கள் வேண்டும் —தாய்மார், அரசர், புலவன்மார், மகளிர், இருவர், நமர், கோக்கள், எவை, யாவை, கரியவை.

13. பின்வரும் சொற்கள் மற்ற நாலு பால்களிலும் எப்படி வரும்?—பிறன், அது, நடந்தாள், ஒன்று, பெரியவர், இவன், எது, ஓடும், சிறியன், கரியன.

14. பால் என்பது என்ன? அதன் பிரிவுகள் எவை? ஒவ்வொரு திணைக்கும் உரிய பால்கள் எவை? உயர்திணைப் பன்மைப் பாலுக்கும் அஃறிணைப் பன்மைப்பாலுக்கும் என்ன பெயர்கள்? ஒருமை,

பன்மை, பலர்பால், ஒன்றன்பால, பலவின்பால
இவற்றிற்கு எக்காரணங்களால இப்பெயர்கள்
வந்தன ?

15 வாக்கியங்களில் எழுவாய் பயனிலைகள் ஒரே பாலு
டையனவாக இருக்க வேண்டுமோ ?

## பாடம் 12.

1. படித்தவர்களும் சில வேளைகளில் மகனைப் பார்த்து
வா அம்மா என்றும, மகளைப்பார்த்து வாடா
ராஜா என்றும் சொல்லுகிறார்களே அப்போது
எந்தப்பாலுக்கு எந்தப்பால் எந்தக் காரணத்தால
வழுவி வந்தது ?

2 எல்லாரும் அமைத்துக்கொண்ட திணைவழுவுக்கு
என்ன பெயர் வைத்தோம்? எல்லாரும் அமைத்
துக் கொள்ளும இம்மாதிரியான பாலவழுவுக்கு
என்ன பெயர் வைக்கலாம ?

3 பின வாக்கியங்களில எப்பாலுக்கு எப்பால் வந்தது
என்றும், எக்காரணத்தால் அது பாலவழு
அமைதி ஆயிற்று என்றும் சொல்லுங்கள் —

(1) தலைமை உபாத்தியாயர் வந்தார்.
(2) அவர் பெரிய குடியன
(3) என தாயார் வந்தார்.
(4) அரசன குடிகளுக்குத் தாய
(5) அவன மினுக்குவதில தாசிதான.
(6) ஒழுக்கமில்லாத நீரும பார்ப்பானு ?
(7) என் மகள் இராசா ஆயிற்றே.
(8) சீ, கைம்பெண்டாட்டி. (ஆணைப்பார்த்து)

(9) இரண்டு கண்ணும் சிவந்தது.

(10) நேற்றுப் பகலெல்லாம் வீணாய்ப்போயிற்று.

4. பால்வழு அமைதிகள் உள்ள வேறு சில வாக்கியங்கள் சொல்லுங்கள்.

5. என்ன என்ன காரணங்களால் பால்வழு அமைதி வரும்? ஒவ்வொரு உதாரணமும் வேண்டும்.

---

## பாடம் 13.

1 நான், நீ, அவன் இவற்றிற்குத் தனித்தனியாகப் பயனிலைகள் சொல்லுங்கள். இப்பயனிலைகளை ஒன்றுக்கொன்று மாற்றிக்கொள்ளலாமா? ஏன்? இம்மூன்று சொற்களும் குறிக்கிற பொருள்கள் ஒரே இடத்திலா, வேறுவேறு இடங்களிலா இருக்கின்றன?

2 ஒவ்வொருவனும் தன்னை நான் என்று எப்போது சொல்வான்? தானாயிருக்கும் தன்மைக்கு ஒரு சொல் பார்த்தோமே அது என்ன? தானாயிருக்கும் தன்மையையுடைய இடத்தை என்ன இடம் என்னலாம்?

3. நீ என்று சொல்லக்கூடியவன் தன்மை இடத்திலிருக்கிறவனுக்கு எப்பக்கத்தில் இருக்கிறான்? தன்மை இடத்திற்கு முன்னிலை கொண்ட இடத்தை என்ன இடம் என்னலாம்? அப்பெயரை விரைவாக உச்சரித்து உச்சரிப்பின்படி அதை எழுதுங்கள்.

4. அவன் என்னக் கூடிய பொருளைத் தன்மையிடத்திற் பார்க்கலாமா, அல்லது முன்னிலை இடத்

திற் பார்க்கலாமா, அல்லது அதைப் பார்ப்ப தற்கு அந்த இரண்டு இடங்களையுமவிட்டுப் படர்க்கை, அதாவது செல்லுதல், அவசியமா? இவ்வாறு படர்க்கையாற காறும் இடத்தை என்ன இடம் என்னலாம்?

5. பின்வரும் சொற்கள் மற்ற இடங்களில் வரும விதங்களைச் சொல்லுங்கள் —நாம், போனேம், வந்தேன், வந்தேனே, கற்றா, கற்றீரால், அது, பவை.

6. வினையால அணையும் பெயர்கள் மூன்று இடங்களி லும வருமா?

7. தொழிற்பெயருள்ள பல வாக்கியம் சொல்லி அந்த தொழிற்பெயர் என்ன என்ன இடத்தில வரும் என்று சொல்லுங்கள்.

8. தொழிற்பெயருக்கும் வினையால அணையும் பெய ருக்கும அப்படியானால் என்ன வித்தியாசம? முன்னே அவற்றிற்கு ஒரு வித்தியாசம் பார்த் தோமே, இப்போது அவற்றிற்குள்ள இரண்டு வித்தியாசங்களையும் சொல்லுங்கள்.

9. இடம் என்பது என்ன? எத்தனை இடங்கள் உண்டு? அவை எவை? அவற்றிற்கு என அப் பெயர்கள் வந்தன?

## பாடம் 14.

1. ஏழைப்புலவன் ஒருவன் அரசனை நோக்கி ஏழைக்கு உதவிசெய்ய வேண்டும் அரசே என்கிறான். இவ் வாக்கியத்திற் சொல்லப்பட்ட ஏழை யார்? இவ்

வாக்கியத்தைப் பேசுகிறது யார்? இங்கே எந்த இடத்திற்கு எந்த இடம் வழுவாக வந்தது? என்ன காரணத்தால் இந்த வழுவை அமைத்துக் கொள்ளலாம்? இப்படி வந்த இடவழுவை அமைத்துக்கொள்வதற்கு என்ன பெயர் சொல்லலாம்?

2 பின்வரும் வாக்கியங்களில் எந்த இடத்திற்கு எந்த இடம வழுவாக வந்து, எக்காரணத்தால இட வழு அமைதி ஆயிற்று என்று சொல்லுங்கள் -

(1) மலைபோல என்னைக்கொண்டவா இருக்கும்போது எனக்கு என்ன குறை? (மனைவி தன் புருஷனிடம் சொல்லியது.)

(2) இராமன் சஙகதி இன்னும் உனக்குத் தெரியவில்லை. (தன்னைக் குறைகூறிய நண்பனுக்கு இராமன கூறியது.)

(3) அரைகுறையாக மடையன ஏதோசெய்து விட்டேன்.

(4) வேலாயாள மகள் உஙகளிடம் வருநத வநதேனே.

(5) அண்ணனுக்குப் பழம் கொஞசம் கொடு. (அண்ணன் பழம் வேண்டிக் கூறியது )

(6) தமிழ் உபாததியாயர் இலக்கணம் சொல்ல மாட்டேனா?

(7) என் சேனைபதி இருக்குமபோது எனக கென்ன கவலை? (அரசன் சேனை பதிக்குக் கூறியது.

(8) மடையா, மாடவீதி போகலாம் வாடா.
(ஞானி தனனோடு பேசியது.)

3. இடவழுவமைதிக்கு வேறு சில உதாரணம் சொல்லுங்கள்.
4. இடவழுவமைதி என்ன என்ன காரணங்களால் வருமென்று சொல்லி உதாரணம் ஒவ்வொன்று காட்டுங்கள்.

## பாடம் 15.

1. இந்த இரண்டு புஸ்தகங்களுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைச் சொல்லுங்கள்
2. நாய், நாயை, நாயால், நாய்க்கு, நாயிலிருந்து, நாயினுடைய, நாயில், நாய் (=நாயே) இவை ஒவ்வொன்றும் என்ன சொல? இவற்றைத் தனித் தனி வாக்கியங்களில் வைத்து எழுதுங்கள்
3. இப்போது நீங்கள் சொன்ன வாக்கியங்களெல்லாம் அர்த்தத்தில் ஒற்றுமையுடையனவா, வேற்றுமையுடையனவா?
4. நீங்கள் கொண்டது நாய் என்னும் ஒரே பெயரல்லவா! அப்படியிருக்க இந்த வேற்றுமை எப்படி வந்தது?
5. அர்த்தத்தில வேற்றுமையுடைய வாக்கியங்கள் எத்தனை நீங்கள் மேலே சொன்னீர்கள்? ஆகையால நாய் என்னும் பெயர்ச்சொல் எத்தனை அர்த்த வேற்றுமைகளைக் கொள்ளுகிறது? அதனால அதற்கு எத்தனை வேற்றுமை இருப்பதாகச் சொல்லலாம்? பல வேற்றுமைகளைக் காட்டுவ

தற்கு நாய் என்னும் பெயரோடு வருகிற சிறு சொல் உருபுகள், அதாவது உருபுகள், எவை? வேற்றுமையைக் காட்டுகிற அந்த உருபுகளுக்கு என்ன பெயர் சொல்லலாம்?

6. தாய் பாலைக் கரண்டியால் பிள்ளைக்குக் கொடுத்ததும் வாயிலிருந்து பிள்ளையினுடைய நாசியில் ஏறிவிட சாமி, ரக்ஷியும் என்றாள் என்னும் வாக்கியத்தில் எத்தனை பெயர்ச்சொற்கள் இருக்கின்றன? எத்தனை வேற்றுமைகள் இருக்கின்றன? அவற்றில் எத்தனையாவது எத்தனையாவது வேற்றுமைகளுக்கு உருபுகள் உண்டு? எத்தனையாவது எத்தனையாவது வேற்றுமைகளில் பெயர்ச்சொல் மாறாமல் நிற்கிறது? எவ்வேற்றுமைகளுக்கு உருபுகள் இல்லை?

7. மேற்கேள்வியிலுள்ள வாக்கியத்தில் எழுவாய் எது? அது எந்த வேற்றுமையிலிருக்கிறது? ஆகையால் முதல் வேற்றுமையை வேறு என்ன வேற்றுமை என்றும் சொல்லலாம்?

8. எட்டாம் வேற்றுமை சாமியை நினைத்துத் தாய் என்ன செய்கிறதாகக் காட்டுகிறது? அப்படி விளிக்கிற, அதாவது கூப்பிடுகிற, எட்டாம் வேற்றுமையை வேறு என்ன வேற்றுமை என்றும் சொல்லலாம்?

## பாடம் 16.

1. இரண்டாம் வேற்றுமை உருபு என்ன? அவ்வுருபுடைய பெயர்களைக்கொண்ட சில வாக்கியங்கள் சொல்லுங்கள்.

2. பின்வரும் வாக்கியங்களில் அவ்வுருபு என்ன என்ன பொருளில், அதாவது அர்த்தத்தில், வருகிறது என்று நினைத்துச் சொல்லுங்கள் —

(1) சோற்றை ஆக்கினாள்.
(2) காட்டை அழித்தார்.
(3) ஊரை அடைந்தான்
(4) அழுக்கை நீக்கினான்.
(5) புலியை ஒத்தான்.
(6) செல்வத்தை உடையான்.
(7) உணவைக் கொடுத்தான்
(8) கல்வியை விரும்பினான்.

3. இரண்டாம் வேற்றுமை யுருபு எந்த எந்தப் பொருளில் வரும்?

4. பின்வரும் ஐ உருபுகளின் பொருள்கள் மேலே நீங்கள் பார்த்த எந்தப் பொருள்களின் வகையைச் சேர்ந்தவை என்று சொல்லுங்கள் .—
குதிரையை வாங்கினான், சுவரையிடித்தான், பலகையை இழைத்தான், பொன்னை உருக்கினான், சிறையை மீட்டான், கடலைக் கடந்தான், பல்லைக் கடித்தான், படத்தைக் காட்டு, புண்ணைக் கழுவு, வானத்தைப் பார்.

5. அவள் சோற்றை ஆக்கினாள் என்னும் வாக்கியத்தில் செய்யப்படு பொருள் எது? அவ்வாக்கியத்தில் செயப்படு பொருளைக் காட்டும் பெயர் என்ன வேற்றுமையிலிருக்கிறது?

6. செயப்படுபொருள்களும் உள்ள சிறு வாக்கியங்கள் சில சொல்லுங்கள்.

## பாடம் 17.

1. வாளால வெட்டினான் என்பதில் உபயோகித்த கருவி என்ன? அக்கருவியைக்காட்டப் பெய ரோடு வந்த உருபு எது? அது எந்த வேற்று மையுருபு?

2. தச்சனால் பலகை அறுக்கப்பட்டது, தச்சன் பல கையை அறுத்தான் எனனுமை வாக்கியம் ஒவ வொன்றிலும் கர்த்தாவை, அதாவது தொழிலைச செய்பவனை, காட்டும் பெயா எனன என்ன வேற்றுமைகளிலிருக்கிறது? கர்த்தாவைக் காட டும வேற்றுமைகள் எவை?

3. ஆகையால் மூன்றாம் வேற்றுமை ஆல் உருபு எந்த இரண்டு பொருள்களில் வரும்?

4. இரண்டாவது கேள்வியிலுள்ள வாக்கியங்களைக கவனித்து, கர்த்தா முதல் வேற்றுமையிலிருந் தால் செயப்படுபொருள எந்த வேற்றுமையிலி ருக்கும் என்பதையும், கர்த்தா மூன்றாம் வேற் றுமையிலிருந்தால் செயப்படுபொருள் எநத வேற்றுமையிலிருக்கும என்பதையும் சொல லுஙகள்.

5. வாளோடு தச்சன் வந்தான் என்பதில தச்சன்கூட இருநத கருவி எது? அதைக்காட்டும் பெய ரோடு வநத உருபு என்ன? கருவியைக காட்டு வது எநத வேற்றுமை? கூடவந்த கருவியைக காட்டும் ஒடு என்னும் உருபை எநத வேற்ற மையுருபு ஆக்கலாம்?

6. பசுவோடு கன்று வந்தது என்பதில் ஒடு என்னும உருபு என்ன பொருளில் வந்தது? கருவி கூட

வருதலைக் காட்டுவது எந்த வேற்றுமை? ஒரு பொருள் மற்றொரு பொருளோடுகூட வருதலைக் காட்டும் இந்த ஓடு என்னும் உருபை எந்த வேற்றுமையுருபு ஆகலாம்?

7. நீங்கள் படித்த மூன்றாம் வேற்றுமை உருபுகளையும் அவற்றின் பொருள்களையும் சொல்லி உதாரணம் காட்டுங்கள்.

8. வாள்கொண்டு வெட்டினான், வாளுடன் வந்தான், வாளொடு வந்தான் என்னும் வாக்கியங்களில் பெயர்களோடு வந்த உருபுகள் எவை? அவ்வுருபுகள் என்ன என்ன பொருள்களில் வந்தன? அப்பொருள்கள் எந்த வேற்றுமைக்கு உரியவை? ஆகையால் கொண்டு, உடன், ஓடு என்னும் உருபுகள் எந்த வேற்றுமையுருபுகள் ஆகலாம்?

9 பின்வரும் மூன்றாம் வேற்றுமையின் பொருள்களைச் சொல்லுங்கள்.—கடவுளால் செய்யப்பட்ட உலகம், வேரோடு செடியைப் பிடுங்கினான், கையோடு இந்த வேலையும் செய், பொன்னால் மோதிரம் செய்தான், தகப்பனோடு மகன் வந்தான், கண்கொண்டு பார்க்க முடியவில்லை, நூலோடு கட்டினார்.

---

## பாடம் 18.

1 நான்காம் வேற்றுமையின் உருபு என்ன? அவ்வுருபுடைய பெயர்ச்சொற்கள் உள்ள சிறுவாக்கியங்கள் சில சொல்லுங்கள்.

2. பின் உதாரணங்களில் அவ்வுருபு என்ன என்ன பொருள்களில் வந்தது என்று நினைத்துச் சொல்லுங்கள் —

(1) பார்ப்பானுக்குக் கொடுத்தான்.
(2) பாம்புக்குப் பகை கீரி.
(3) கூலிக்கு வேலை செய்தான்.
(4) இராமனுக்குத் தம்பி பரதன்.
(5) அரசனுக்குச் சேனை அவசியம்.
(6) சோழனுக்கு நண்பர் ஒரு புலவர்.
(7) மதுரைக்கு வடக்கே சிதம்பரம்.
(8) பரதனுக்கு இராமன் குணத்திலும் பெரியவன்
(9) ஒருநாளைக்கு இரண்டுதரம் குளித்தான்
(10) ஊருக்குப் போனான்.
(11) கூழுக்கு மா அரைத்தான்.
(12) ஓட்டத்திற்கு அகத்திலைத் தான் ராஜா

3. நான்காம் வேற்றுமையின் குவ்வுருபின் பொருள்கள் எவை?

4. கூழின் பொருட்டு வேலை செய்தான், கூலி நிமித்தம் வேலை செய்தான் என்பவற்றில் பெயர்களோடு வந்த உருபுகள் எவை? அவை என்ன பொருள்களில் வந்தன? அப்பொருள் எவ்வேற்றுமைக்கு உரியது? ஆகையால் அவ்வுருபுகளை எவ்வேற்றுமை யுருபுகளோடு சேர்க்கவேண்டும்?

5. நான்காம் வேற்றுமையின் எல்லா உருபுகளையும் பொருள்களையும் சொல்லி ஒவ்வொரு உதாரணம் கொடுங்கள்.

## பாடம் 19.

1. ஐந்தாம் வேற்றுமையின் உருபு என்ன? அவ்வுருபையுடைய பெயர்கள் வரும் சில வாக்கியங்கள் சொல்லுங்கள்.
2. திண்ணையிலிருந்து விழுந்தது என்பதில் அவ்வுருபு என்ன பொருளில் வந்தது?
3. வயதில் முருகன் பெரியவன், ஆனால் உயரத்தில் அவன் சிறியவன் என்னும் வாக்கியத்தில் எது காரணமாக முருகன் பெரியவன், எது காரணமாக அவன் சிறியவன்? அக்காரணங்களைக் காட்டும் பெயர்களோடு வந்த உருபு எது? அந்த உருபு எந்த வேற்றுமையின் எந்த உருபில் ஒருபாகமாயிருக்கிறது என்று நினைத்துச் சொல்லுங்கள். ஆகையால் இல் உருபை எந்த வேற்றுமை உருபோடு சேர்த்துக் கொள்ளலாம்? அதன் பொருள் என்ன?
4. சோழனில் பாண்டியன் பெரியவன் என்பதில் பாண்டியனை மாத்திரம் சொல்லாமல் சோழனையும் சொன்னது ஏன்? இங்கே இல் உருபு எதைக்காட்ட ?
5. திண்ணையினின்று விழுந்தான், மலையின் வீழருவி என்பவற்றில் பெயர்களோடுவந்த உருபுகள் எவை? அவை என்ன பொருள்களில் வந்தன? அப்பொருள்கள் எவ்வேற்றுமைக்கு உரியன? ஆகையால் இப்புது உருபுகளை எவ் வேற்றுமை யுருபுகளோடு சேர்க்கவேண்டும்?
6. ஐந்தாம் வேற்றுமை யுருபுகளில் ஒன்றாக இப்போது நீங்கள் சொல்லிய இன் உருபு 'மதுரை

யின் வடக்கே சிதம்பரம் என்பதில் என்ன பொருளில் வந்தது?

7. ஐந்தாம் வேற்றுமையின் எல்லா உருபுகளையும் எல்லாப் பொருள்களையும் சொல்லி ஒவ்வொரு உதாரணம் காட்டுங்கள்.

## பாடம் 20.

1. ஆறாம் வேற்றுமை யுருபு எது? அவ்வுருபுடைய பெயர் ஒவ்வொன்றுள்ள சிறு வாக்கியங்கள் சில சொல்லுங்கள்.

2 இராமனுடைய அம்பு பாய்ந்தது என்னும் வாக்கியத்தில் சொல்லப்பட்ட பொருள்கள் எவை? இப் பொருள்களுக்கு ஏதாவது சம்பந்தம் உண்டா, இல்லையா? அச் சம்பந்தத்தைக் காட்டுவது எது? ஆறாம் வேற்றுமையின் உருபு, ஆகையால், எதைக் காட்டும்?

3 இராமனது அம்பு பாய்ந்தது என்பதில் உள்ள இருபொருள்களுக்கும் உள்ள சம்பந்தத்தைக் காட்டுவது எது? ஆகையால், அது என்னும் உருபை எந்த வேற்றுமை யுருபு ஆகவேண்டும்?

4. ஆறாம்வேற்றுமையின் எல்லா உருபுகளையும் பொருளையும் சொல்லி உதாரணம் காட்டுங்கள்.

## பாடம் 21.

1. ஏழாம்வேற்றுமையின் உருபு என்ன? ஊரில் கண்ணொய் இருக்கிறது என்பதில், எதன்

இடம் எது இருக்கிறது? காலையில மழைபெய்
தது என்பதில எக்காலத்தின இடமாய் எது
உண்டாயிற்று? சூதில வென்றான் என்பதில
எத்தொழிலின இடமாய எது உண்டாயிற்று?
கறுப்பில அழகு என்பதில எக்குணத்தின
இடமாய் எது உண்டாயிற்று? ஆகையால்
ஏழாம் வேற்றுமை யுருபு எப்போதும எதைக
காட்டும்?

2 இல் உருபு முன்னே வேறொரு வேற்றுமைக்கும் உருபாக வந்ததோ? எவ்வேற்றுமைக்கு?

3 அது அந்த வேற்றுமை யுருபாக வரும்போது என்ன பொருளை உடையது, ஏழாம வேற்றுமை யுருபாக வரும்போது என்ன பொருளை உடையது என்று உதாரணம் காட்டிச சொல்லுங்கள

4. மரத்திற பறவை இருக்கிறது, அறிவிற பெருமை உண்டாகும், கல்வியிற பெரியர் கம்பர், பூவிற சிறந்தது தாமரை, முத்திற சிறந்தது பாண்டிய நாடு, முத்தில் ஒளி உண்டு, செல்வத்திற சிறந்தவன் செட்டி, கையில விரலுண்டு இவை ஒவ்வொன்றிலும் உள்ள வேற்றுமை ஐந்தாவதா ஏழாவதா என்று காரணத்தோடு சொல்லுங்கள.

5. காட்டுள் ஓடினான், நிழற்கீழ் நின்றான், தலைமேல அடித்தான், அரசர்முன் அடங்கிநட, நண்பன் பின நடந்தான, பலரிடம் சென்றோன, நீரிடை நீந்தினான, ஊர்க்கண் இருந்தான, நகர்ப்புறம் சென்றான் இவை ஒவ்வொன்றிலும் உள்ள பெயரோடு வந்த உருபு எது? அது என்னப் பொரு

ளைக் காட்டும்? ஆகையால் ஒவ்வொரு உருபும் எந்த வேற்றுமை யுருபாக வேண்டும்?

6 நீங்கள் படித்த ஏழாம் வேற்றுமை யுருபுகள் எல்லாம் சொல்லி வேறு உதாரணங்கள் ஒவ்வொன்றும் கொடுங்கள்.

---

## பாடம் 22.

1. இராமனே, வா என்பதிலுள்ள பெயர் என்ன வேற்றுமையிலிருக்கிறது? அவ்வேற்றுமைக்கு வேறு பெயர் என்ன? இராமன் என்னும் எட்டாம் வேற்றுமைக்கு முதல்வேற்றுமை என்ன?

2. எட்டாம் வேற்றுமை எதைக்காட்டும்? இராமனே, வா என்று விளிக்கையில் இராமன் சேய்மையில், அதாவது தூரத்தில், இருக்கிறானா, அண்மையில், அதாவது அருகில், இருக்கிறானா? அண்மையி லிருப்பவனை விளிக்கும் இராமன் என்னும் பெயரை, ஆகையால், என்னவிளி எனலாம்? அவன் சேய்மையிலிருந்தால் எப்படி விளிக்கவேண்டும்? அந்த விளிக்கு என்ன பெயர் வைக்கலாம்?

3. இராமன் என்னும் பெயர் சேய்மைவிளியாக வரும் போதுஉள்ள அதன் உருவத்திற்கும் அது அண்மை விளியாக நிற்கும்போது உள்ள அதன் உருவத்திற்கும் என்ன வித்தியாசம்? ஆகையால் எந்த விளியில் பெயர்கள் பெரும்பாலும் உரு வம் மாறும்?

4. பின்வரும் விளிகளுக்கு முதல் வேற்றுமை சொல் லுங்கள்.—அரச, கிளிகாள், சான்றீர், நங்காய்,

நம்பீ, எமரீர், விடலாய், மதீ, குழையாய், தாஅய், சிறுஅர், அம்மாஅன், வணிகீர், தோன்றல், புலவீர, மடவரால், பேஎய், அடிகேள், கண்ணாஅஅஅ.

5. (1) பின்வரும் ஒவ்வொரு பெயருக்கும் மூன்று விதமான விளிவேண்டும்.—நாரை, மக்கள், தந்தை, தோழி, புலவன், நமர், நல்லாள், முயல், நாய்கர், கடலார், தெவவர், பிள்ளைகள், வேள், சேய், மால்.

(2) பின் ஒவ்வொன்றிற்கும் நாலு விளி வேண்டும்:—அலவன், மனனன், அண்ணன, அப்பன், அம்மை, அன்னை.

(3) ஐயன என்பதறகு ஐந்து விளிகூறுஙகள்.

6 நீர, நாம், யான், யாம், நான், தான், தாம், அவன், இவன், மாடு, எவன, யாவன், எது, எவை, இவர், அவர், அது, அவை, ஈ, நீ, எல்லாம், இவை ஒவ்வொன்றிறகும் எட்டு வேறறுமை களையும் வரிசையாயச சொலலிருபபாருங்கள். இவறறில் எழுவாய் வேறறுமையில் மாததிரம் வருவன எவை? விளி கொளளாதவை எவை? விளிகொள்ளும பெயர்கள் எந்த இடததிறகுரியவை? எந்த இடத்துப்பெயர்கள் ஒருபோதும் விளிகொள்வதில்லே? விளிகொள்ளாத படாக்கைப்பெயர்களும் உண்டோ? சில கூறுங்களா.

7. வேறறுமையுருபுகளைக் கொள்ளும்போது சொல்லின் முதலிலே மாறுதலடைகிற பெயர்கள் சில சொல்லுங்கள்.

8 மரம், அவை, எல்லாம், பல முதலிய பெயாகள் வேற றுமை யுருபுகளைக கொளளுயபோது அதது, அறறு முதலிய சிறு சொறகள் இடை யிடையே வருகின்றனவே இவை வராமலிருந் தால எப்படியிருக்கும் என்று உசசரிதநுப பாருஙகள். ஆகையால இசசிறு சொறகள வரு வது ஏன்? காதுககு இனிமை யுண்டாகும்படி இப்படிச சொறகளோடு சாரியை, அதாவது சார்பு, உடையதாய வருகிற சிறுசொறகளுககு என்ன பெயா வைக்கலாம்?

## பாடம் 23.

1. மதுரைக்கு வடககே சிதம்பரம் என்பதில் வேற றுமையுருபு என்ன பொருளில வந்தது? அநற குப் பதிலாக வேறு எநத வேறறுமையின எநத உருபைச சோததாலும் அந்தப பொருளை வரும? ஆகையால, எல்லைப்பொருள எநத எநத வேறறுமையுருபுகளில் ஏறிவரும்?

2 சொநதமாகப பல நல்ல குதிரைகளையுடைய ஒரு வன எக் குதிரையில் ஏறிச செலலலாம் என்று சிறிது மயஙகிப் பின ஒன்றில் ஏறிவருவது போல, எல்லைபபொருள் தனக்கு உரிய நாலாம வேறறுமையின் கு உருபில் ஏறிவரலாமா அல் லது தனக்குரிய ஐந்தாம் வேறறுமையின் இன் உருபில ஏறிவரலாமா என்று கொஞசம் மயங கிப் பின் அவவுருபுகள ஒன்றில ஏறிவருகின் றதே, இம்மாதிரியான பொருள் மயககததிறகு என்ன பெயா சொல்லலாம்?

3. பினவரும உருபு ஒவ்வொன்றும் எந்த வேற்றுமையில் எநதப பொருளை உடையது என்றும் அது வேறு எநத வேற்றுமையின் எநத உருபோடு அநதப பொருளில மயஙகுகிறதென்றும் சொல்லுஙகள.—

(1) இராமனுடைய மனைவி சீதை.
(2) அடுதத நாழிகைக்கு முடியும இது.
(3) நகரை நீஙகினன
(4) களளனோடு ஒததான்.
(5) நலல சமயததிறகு வந்தாய.
(6) வாளில வெல்லமாட்டோ.
(7) ஊரைப் போனன.
(8) காதிற கேட்டான.
(9) பெருங்காறறுககுப பசுங்காயும விழும
(10) உடம்பால என்ன பயன்?
(11) கடவுளுக்கு வணஙகினன.
(12) கறறவரோடு சேர்நதான்.
(13) மாஙகாய்ககு ஆசையில்லை இவவருஷம.
(14) வலையில் மீன பிடிததான்.
(15) கறிக்கு உப்பில்லை.
(16) அறிவால அவன் சிறநதவன.
(17) கையில அன்னததைப் பிடிததான்.
(18) ஞானியிடம் துககமிலலை.

4. ஏதாவது நாலு வேற்றுமைப் பொருளைச சொல்லி அவை எநத எநத வேற்றுமையில மயங்கும் என்பதைக் கூறுஙகள.

5. மதுரைககு வடக்கே சிதம்பரம், மதுரையின் வடக்கே சிதம்பரம் என்று பொருள் மயக்கம்

வரும்போது இவ்வாக்கியங்களின் பொருள் நன்ருய் விளங்குவதற்கு கு உருபை இன் உருபாகவும் இன் உருபை கு உருபாகவும் மாற்றவேண்டியது அவசியமோ? என?

6. ஒருவருக்குக் கொடுப்பதை அல்லது காட்டுவதைக் குறிக்கும் வேற்றுமையும் அதன் உருபும் எவை? அப்பொருள் இரண்டாம் வேற்றுமை ஐ உருபுக்கு உண்டோ? ஏதோ நல்லவழி சாமி என்னைக் காட்டாமற் போகாது என்னும் வாக்கியமா, அல்லது ஏதோ நல்லவழி சாமி எனக்குக் காட்டாமற் போகாது என்னும் வாக்கியமா எது நன்ருய்ப் பொருள் விளங்குகிறது? என? ஆகையால், ஒரு வேற்றுமைப் பொருளைக் காட்டுவதற்கு அப்பொருளுக்கு உரிமையில்லாத ஒரு வேற்றுமையுருபு வந்தால் அப்பொருள் மிக நன்ருக விளங்க என்ன செய்யவேண்டும்?

7. ஒரு சத்திரத்தில் பலர் தாம் ஏறிவந்த குதிரைகளை ஓரிடத்திற் கட்டியிருக்க, அவசரமாய்ச் செல்ல வேண்டி அவர்களில் ஒருவன் இரவில் தனது குதிரையை அவிழ்க்கப் போனபோது அவனைத் தன் எசமானுக மயங்கிக்களைத்த ஒன்றின்மேல் அவன் ஏறிச்சென்றதை யறிந்து குதிரைக் குரியவன் ஓடிப்போய் அவனைத் தன் குதிரையிலிருந்து இறக்கி அவன் குதிரையி லேறிப் போகச் செய்தான். மேலேசொன்ன சம்பவத்தில் ஒருகுதிரை மற்ருெரு குதிரையின் எசமானனைப்பார்த்து மயங்கினதுபோல ஒரு வேற்றுமை யுருபு தனக்கு உரியதல்லாத மற்ருெரு

வேற்றுமை யுருபின் பொருளோடு மயங்கிவருமாயின் அந்த உருபு மயக்கத்திற்கு என்ன பெயர் வைக்கலாம் ?

8 காலத்தினால் செய்த நன்மை, துக்கத்துள் நீக்கும், இந்த நகரக்கே வாழ்கிறேம், இவை ஒவ்வொன்றிலுமுள்ள உருபு மயக்கத்தை விவரித்துக் காட்டுங்கள்.

9. பொருள் மயக்கம் என்றால் என்ன ? உருபு மயக்கம் என்றால் என்ன ? இரண்டுக்கும் வித்தியாசம் சொல்லுங்கள்.

## பாடம் 24.

1. எத்தனை வேற்றுமைகளுக்கு எப்போதும் உருபு உண்டு ? அவ்வேற்றுமைகள் எவை ?
2. மண்ணை வெட்டினன் என்னும் வாக்கியத்தைப் பொருள் மாறாமல் எப்படித்தொகை, அதாவது சுருக்கம், ஆக்கலாம் ?
3. மண்வெட்டினன் என்பது தொகையானால் அதனுடைய விரி எது ? இந்த விரியும் தொகையும் எந்த வேற்றுமையில் வந்தன ?
4. இரண்டாம் வேற்றுமை விரியும் தொகையும்வேறு சில சொல்லுங்கள்.
5. கல்லெறிந்தான், கல்லாலெறிந்தான், இவற்றில் விரி எது ? தொகை எது ? அவை எவ்வேற்றுமையில் வந்தன ?
6. மூன்றும் வேற்றுமை விரியும் தொகையும் வேறு சில சொல்லுங்கள்.

7. இராமனுக்கு மனைவி, இராமன் மனைவி, இவற்றில விரி எது, தொகை எது? அவை எவ்வேற்றுமையில் வந்தன.
8. நாலாம் வேற்றுமை விரியும் தொகையும் வேறு சில வேண்டும்.
9. நகரிலிருந்து நீங்கினன், நகர் நீங்கினன் இவற்றில் தொகை எது, விரி எது? அவை எவ்வேற்றுமையில வந்தன?
10. ஐந்தாம வேற்றுமை விரியும் தொகையும வேறுசில வேண்டும்.
11 இராமன் தோள், இராமனுடைய தோள் இவை எந்த வேற்றுமை விரி தொகைகள?
12. ஆறும வேற்றுமைத தொகைகள சில சொல்லுங்கள.
13. கையில் விரல் என்பதற்குத தொகை எது? இவை எவவேற்றுமைககு உரியவை?
14. ஏழாம வேற்றுமைத தொகைகள் சில சொல்லுங்கள்.
15. மண வெட்டினன், கலலெறிந்தான், முதலிய தொகைகள் ஒவ்வொனறிலுமுள்ள இரணடாம வாாததைகள் வராமலிருநதால் முதல் வாாத்தை யாகிய பெயர் என்ன வேற்றுமையிலுள்ளது என்று சொலல முடியுமா? ஆகையால எப்போது தான தொகை வரும?
16. இராவணனைக் கொன்றான், எளியவாக்குக் கொடுததார் எனனும விரிகள் இராவணன கொன்றான், எளியவா கொடுததாா என்று தொகைகள் ஆகுமா? ஏன்?

## பாடம் 25.

1. தங்கத்தால்செய்த குடம் என்பதை எப்படித் தொகை ஆக்கலாம்?

2. தங்கக்குடம் என்பதில் தொக்கவை எவை? அவற்றில் ஆல் எவ்வேற்றுமை யுருபு? அவ்வுருபோடு உடன் தொக்க செய்த என்னும் சொல் அவசியமோ?

3. பொருளை அல்லது அர்த்தத்தைக் குறிக்கும்வேறு ஒரு சொல் முன் படித்தீர்களே அது எது?

4. ஏழுகிணறு இருக்கும் ஊருக்கு என்ன பெயர் சொல்லுகிறார்கள்? அதுபோல, பயன் விளக்கும் சொல்லுக்குச் சுருக்கமான பெயர் என்ன சொல்லலாம்?

5 இப்போது, தங்கக்குடம் என்பது எதுவும் எதுவும் உடன் தொக்க தொகை?

6. பின் ஒவ்வொன்றையும் உருபும் பயனும் உடன் தொக்க தொகை ஆக்கி, இந்த வேற்றுமையில் வந்தது என்று சொல்லுங்கள் — கையையுடைய யானை, கல்லால் கட்டிய வீடு, பிள்ளைக்குக் கொடுக்கும் பால், மலையிலிருந்து விழும் அருவி, சீதையினுடைய புருஷன் இராமன், ஏரியிற் பிடித்த மீன்.

7. பின் வருபவற்றில் விரி, தொகை, உருபும் பயனும் உடன் தொக்க தொகை இவைகளைக் காட்டி அவற்றின் வேற்றுமைகளையும் சொல்லுங்கள்.— மணற்பாம்பு, சோறுண்டான், பந்தயக் குதிரை, மயிற்சிறகு, தலை வணங்கினான், மலைக்குறவன்,

மரக்கிளை, மாடத்திற் புறா உண்டு, நீர்க்கோழி, கூழ் உண்டான், கைவாள், ஆகாயகங்கை, சீத்தலை, தமிழ்ப்புலவர்.

8. எல்லாவேற்றுமைகளிலும் தொகை வருமோ? ஏன்?

9. வேற்றுமைத் தொகைகளுக்கும் பண்புத்தொகைக்கும் என்ன வித்தியாசம்?

# பாகம் II.

## பாடம் 1.

1. செய்தான், செய்கிறான், செய்வான், செய்து, செய்த என்பவை எதைக்காட்டும் சொற்கள்? ஆகையால் இச்சொற்களை என்ன சொற்கள் என்னலாம்?

2. மேலேசொன்ன வினைச்சொற்களைத் தனித்தனி வாக்கியங்களில் பயனிலைகளாக வைத்துச் சொல்ல முடியுமா என்று பாருங்கள். எவை பயனிலைகளாக வருகின்றன எவை பயனிலைகளாக வரவில்லை என்று சொல்லிக் காரணமும் காட்டுங்கள்.

3. ஆகையால், செய்தான், செய்கிறான், செய்வான் என்பவற்றைப்போல பொருள் முற்றுப்பெற்று, அதாவது முடிந்து, நிற்கும் வினைச்சொற்களுக்கு என்னபெயர் வைக்கலாம்? பொருள் முற்றுப்பெறாமல் எச்சமாய், அதாவது குறைந்து, நிற்கும் செய்து, செய்த என்னும் சொற்களைப் போன்ற வினைகளுக்கு என்னபெயர் வைக்கலாம்?

4. மேல் வினைகளில் எவை வினைமுற்று, எவை வினை எச்சம்? அவ்வினை முற்றுக்களில் பகுதி என்ன, விகுதி என்ன? அந்த விகுதி எதைக்காட்டுகிறது? அந்த வினை எச்சங்களில் பாலைக்காட்டும் விகுதி இருக்கிறதா?

5. ஆகையால், வினைமுற்றுக்கும் வினை எச்சத்துக்கும் என்ன வித்தியாசங்கள் உண்டு?

6. காண், ஓடு, படி, போ, வா, கொடு, தேடு, மற என்னும் பகுதிகளிலிருந்து ஒவ்வொரு வினைமுற்றும் இரண்டிரண்டு வினைஎச்சங்களும் சொல்லுங்கள்.

7. மேலே சொன்ன பகுதிகளெல்லாம் என்ன சொற்கள்? ஆகையால் அவற்றை என்ன பகுதிகள் என்னலாம்?

---

## பாடம் 2.

1. அவன் படித்தான் என்பதில் பயனிலை எது? அது என்ன சொல்? அதில் அவன் செய்த தொழில் நன்றாய்த் தெரிகிறதா? அவன் அத்தொழிலைச் செய்த காலம் நன்றாய்த் தெரிகிறதா? படித்தான் என்னும் வினைமுற்றில் பகுதி என்ன பகுதி? இப்போது, அவன் மூக்கன் என்னும் வாக்கியத்தைப் பாருங்கள் அதன் பயனிலை எது? மூக்கன் என்பதற்கு அவ்வாக்கியத்தில் என்ன பொருள்? அதற்கு அவ்வாக்கியத்தில் அப்பொருளானால் அது அங்கே என்ன சொல்? மூக்கன் என்னும் சொல்லில் தொழிலும் காலமும் குறிப்பாய்த் தெரிகிறதா, நன்றாய்த் தெரிகிறதா? மூக்கன் என்னும் வினைமுற்றிற் பகுதி என்ன? அது என்ன சொல்?

2. இப்போது, படித்தான், மூக்கன் என்னும் இரண்டு வினைமுற்றுக்களுக்கும் உள்ள மூன்று வித்தியாசங்களையும் சொல்லுங்கள்.

3 வினைப் பகுதியிலிருந்து பிறந்து தொழிலும் காலமும் தெரிய நிலை கொண்ட வினை முற்றை என்ன வினை முற்று என்னலாம்? பெயர்ப் பகுதியிலிருந்து பிறந்து தொழிலும் காலமும் குறிப்பாய் மாத்திரம் காட்டும் வினை முற்றை என்ன வினை முற்று என்னலாம்?

4. பின் வாக்கியங்களிலுள்ள வினை முற்றுக்கள் தெரிநிலை வினை முற்றுக்களா, குறிப்பு வினை முற்றுக்களா என்று காரணத்தோடு சொல்வதுமல்லாமல் குறிப்பு வினை முற்றுக்களுக்குப் பொருளும் பகுதியும் கூறுங்கள் —

(1) இராமன் பெரிய கையன்.
(2) அரசரே பெரியர்.
(3) சிறுவன் போர் வென்றான்.
(4) நமது மன்னர் இனிய சொல்லர்.
(5) சிவன் மூன்று கண்ணன்.
(6) பாண்டியன் மதுரைப் பதியான்.
(7) குதிரை மிகக் கடும் நடையது.
(8) உன் மாடு மெல்ல நடக்கின்றது.
(9) சோழன் ஒருவன் கரிகாலன்.
(10) குழந்தை கறுத்தது.
(11) இராமன் கரியன்.
(12) பெண்ணைச் சிங்காரித்தாள்.
(13) அவன் ஐந்து பிராயத்தினன்.
(14) அக்காலத்து அரசர் பலர் கொடும்கோலர்.
(15) முனிவன் நீண்ட சடையினன்.
(16) அரசன் கவியைக் கடைக்கணித்தான்.
(17) அவன் என்ன பேசினன்?

(18) அரசி மிக நல்லள்.
(19) நீர் பெரியீர்.
(20) யாம் சிறியேம்.
(21) நீ நல்லை.
(22) அவர் அல்லர்.
(23) அவை கரியன.
(24) நீ கரியை.
(25) பலர் எளியர்.
(26) நீ அறிவு இல்லாய்
(27) வறுமை கொடிது.
(28) நிலம் சிறிது.
(29) கல்வி எல்லார்க்கும் உரியது
(30) கல் உடைந்தது

---

## பாடம் 3.

1. செய்த, செய்தது என்னும் சொற்கள் என்ன சொற்கள்?
2. செய்த என்பதைச் சிறு வாக்கியங்கள் சிலவற்றில் வைத்துச் சொல்லுங்கள். ஒவ்வொரு வாக்கியத்திலும் செய்த என்பது எந்தச் சொல்லோடு போய்ச் சேருகிறது என்றும் அந்தச் சொல் என்ன சொல் என்றும் சொல்லுங்கள். இப்படி, எச்சம் பெயரைப் போய்ச் சேருமானால் அவ்வெச்சத்தை என்ன எச்சம் என்னலாம்?
3. செய்த என்பது தெரிநிலைப் பெயரெச்சமா, குறிப்புப் பெயரெச்சமா? ஏன்?
4. பின் வரும் பகுதிகள் ஒவ்வொன்றிலிருந்தும் ஒவ்வொரு தெரிநிலைப் பெயரெச்சம் சொல்லி

அதை ஒரு வாககியத்தில அமைததுக் காட்டுங்கள் :—நில், ஏறு, கொய், பேசு, அடி, வெல், ஓடு, கா, கல், கோ, வா, போ.

5. தெரிநிலைப் பெயரெசசம் தொழிற்பெயரையும் வினையாலணையும் பெயரையும் பண்புபெயரை யும் ஆகு பெயரையும் போய்த தழுவுமா என்று பாாதது, தழுவுமானல் ஒவ்வொரு உதாரணம் கொடுஙகள்.

6. பெயரெச்சம் எனபது பெயர்சசொல்லா, வினைச் சொலலா ?

7. செய்து எனனும் எசசததை வாக்கியங்களில் வைததுச் சொல்லுங்கள்.

8. ஒவவொரு வாக்கியததிலும் செய்து எனபது எந தசசொல்லோடு போய்சசேருகிறது என்றும் அசசொல என்ன சொல என்றும் சொலலுங கள்.

9. பெயரோடு போய்சசேரும் எசசததிறகு என்ன பெயா வைத்தோம் ? வினையோடு போய்ச் சேரும் எசசத்திறகு என்ன பெயர் வைக்க வேண்டும் ?

10. அவன் படிதது வந்தான், அவன் படிததுத் தேறி வநதான, அவன படிததுத் தேறின சிறுவன், அவன் படிததுத் தேறுதல என்றைக்கு, அவன் படிததுத தேறினவன் அல்லவா என்னும் வாக் கியஙகளில் வினையெசசங்களையும் அவை போய்ததழுவுகிற சொற்களையுங்காட்டி அச சொறகள் என்ன சொற்கள் என்று சொல்லுங் கள்.

11. ஆகையால், வினையெச்சம் என்ன என்ன சொற்களைத்தழுவும்? உதாரணம் சொல்லுங்கள்.
12. வினையெச்சம் தொழிற்பெயரையும் வினையாலணையும் பெயரையும் போய்ச்சேரும்போது என அதைப் பெயரெச்சம் என்னக்கூடாது?
13. மேலே வந்த வினையெச்சங்கள் தெரிநிலை வினையெச்சங்களா, குறிப்புவினை யெச்சங்களா? ஏன்?
14. பின் ஒவ்வொன்றிலுமுள்ள தெரிநிலைப்பெயரெச்சங்களையும் தெரிநிலை வினையெச்சங்களையும் அவை தழுவும் சொற்களையும் சொல்லுங்கள்:—
    (1) மாணாக்கன் படிக்க வந்தான்.
    (2) நீ வந்தால் பாடம் சொல்வேன்.
    (3) நான் படிக்கின்ற பாடம் இது.
    (4) சிலர் படியாது எங்கும் அலைகிறார்.
    (5) கல்லாமல் அலைதல் கெட்டது.
    (6) நீர் கண்ட கற்றோர் யார்?
    (7) அவன் செய்த செய்கையைப் பார்.
    (8) அரசன் செல்லும் வழி பெரியது.
    (9) உம்மைக் காண்பான் வந்தேன்.
    (10) நன்மை செய்யின் நன்மை பெறுவாய்.
    (11) கல்லாச் சிறுவர் பின் வருந்துவர்.
    (12) ஒரு நாளும் வராத பெரியவர் வந்தார்.
    (13) அவன் வறுத்த வற்றல் கசக்கின்றது.
    (14) அங்கே போய் வருவார் யார்?
    (15) இளைத்து வந்தால் இங்கே இரு.
    (16) வண்டி அமர்த்தப்போனவன் எவன்?
    (17) யாராவது என்னைத் தேடி வருதல் உண்டோ?

(18) இஙகு வந்துபோன சேவகன் தெரியுமா?
(19) அவனைக் கண்டால் வரச்சொல்.
(20) தாய்முகங காணுத பிள்ளை வாடும்.
(21) உலகம் அழியின அவா பெயா அழியும்.
(22) நீ வநது போவது நல்லது.
(23) கண்டு பேசினுல காது கொடுத்துக் கேட் பான.
(24) எநநாளும் நடவாத காரியம் இது.
(25) இங்கிலததில நட்டிய வெற்றிலை நன்ருய்ப் பயிராகும்.
(26) அதறகுத தப்பிய பிழைத்தவர் இல்லை.
(27) அதறகுத தப்பிப் பிழைப்பது அரிது.
(28) அநநோய்க்குத தப்பிப் பிழைதது வந தான்.
(29) அநநோய்க்குத தப்பிப் பிழைதத சிறு வன்
(30) அநநோய்கருத தப்பிப பிழைததான.

## பாடம் 4.

1. நீ பெரியை எனனும் வாககியததில பெரியை என்பது எனன சொல? அதன பகுதி எனன? நீ பெரிய வீரன என்பதில் பெரிய என்பது எதைபபோய்ச சோகிறது? அது என்னசொல? ஆகையால், பெரிய எனபது என்ன சொல்? குறிப்பு வினைமுறறுகிய பெரியை என்பதோடு சம்பந்தமுடைய பெரிய என்னும் எச்சத்தை என்ன எசசம் என்னலாம்.

2. பின் வருபவற்றிலுள்ள குறிப்புப் பெயரெச்சங்களையும் அவற்றின் பகுதிகளையும் சொல்லுங்கள் —

(1) கையில் இல்லாத பொருளைக் கேட்டான்.
(2) எனது கரிய குதிரை ஓடிற்று.
(3) அவன் நல்ல பசுவொன்று வாங்கினான்.
(4) இலையின் பசிய நிறம் வாடிற்று.
(5) சிறிய கண்ணே அண்டத்தினும் சிறந்தது.
(6) வழியல்லா வழியிற் போகாதே.
(7) அவர் அரிய செயல் செய்தார்.
(8) காசில்லாத கஷ்டம் கொடியது.
(9) பெரியோர் சிலர் எளிய குலத்திற் பிறந்தவர்.
(10) எனது அரிய பெற்றோர் வந்தார்.
(11) இராமன் கொடிய வில் வளைந்தது.
(12) அவன் கூரிய அம்பு பாய்ந்தது.
(13) இராவணன் வலிய நெஞ்சம் பிளந்தது.
(14) மெல்லிய மாதரும் நடந்தார்.
(15) காவிரியிற் புதிய வெள்ளம் வந்தது.
(16) நல்ல வெற்றிலை நட்டான்.
(17) அவனுக்குரிய நண்பர் வேறு.
(18) நெடிய மாலும் குறுகினான்.
(19) தோழனே, தீயசொல்லைக் காதிற் கூறாதே.
(20) இனிய தேனினும் அது இனிக்கும்.

3 தெரிநிலைப் பெயரெச்சம் என்ன என்ன பெயர்களைத் தழுவும் என்று பார்த்தீர்கள்? குறிப்புப் பெயரெச்சமும் அம்மாதிரியான பெயர்களைத் தழுவுமா என்று மேற்கேள்வியிலுள்ள வாக்கியங்களைப் பார்த்துச் சொல்லுங்கள்.

4. நீ பெரிது வருந்தினாய் என்பதில் பெரிது என்பது எதைப்போய்த் தழுவுகிறது? அது என்ன சொல்? ஆகையால் பெரிது என்பது என்ன சொல்? பெரிமை என்னும் குறிப்பு வினைமுற்றோடு சம்பந்தமுடைய பெரிது என்னும் எச்சத்தை என்ன எச்சம் என்னலாம்?

5. பின் வருபவற்றிலுள்ள குறிப்பு வினையெச்சங்களையும் அவற்றின் பகுதிகளையும் சொல்லி, அவ்வெச்சங்கள் தழுவுகிற சொற்கள் என்ன சொற்கள் என்று கூறுங்கள் —

(1) அரசனின்றி நடவாது உலகம்
(2) நல்ல பெண்கள் மெல்லப் பேசுவர்.
(3) நீ யில்லாது முடியாது.
(4) அவனில்லாமற் செய்யும்வேலை கெடும்.
(5) நீயன்றி அவ்வளவு தூரம் போகிறவர் யார்?
(6) உப்பில்லாமல் உண்ண விரும்பினன்.
(7) இவன் பெரிதும் நல்லன்.
(8) அவனின்றி அசையாது அணுவும்.
(9) உணவின்றிப் படுத்து உறங்கினன்
(10) அறிவு பெரிதில்லான் வந்தான்.
(11) கன்றில்லாது பசு வாங்கினன்.
(12) அவர் பெரிதுங் கூரிய அறிவுள்ளவர்.
(13) உணவின்றி உழைத்தல் கெட்டது.
(14) நீயே வலியத் தந்தாய்
(15) ஆண்டவன் அருளில்லாமல் வாழ்வார் யார்?
(16) நன்று கூறினாய்.
(17) அரசர் இனிது பேசினர்.
(18) அழகு பெரிதில்லாததை விரும்பேல்.

(19) அறிவு பெரிதின்றி வளர்ந்தார் பலர்.
(20) பசியின்றி உண்ணல் தீது.

குறிப்பு வினையெச்சம் குறிப்பு வினைமுற்றையும் குறிப்பு வினையெச்சத்தையும் குறிப்புப் பெயரெச்சத்தையும் தொழிற்பெயரையும் தெரிநிலை வினையாலணையும் பெயரையும் குறிப்பு வினையாலணையும் பெயரையும் தழுவுவதற்கு மேற்கோள் வழியிலுள்ள வாக்கியங்களிலிருந்து ஒவ்வொரு உதாரணம் கொடுங்கள்.

## பாடம் 9.

1 அவன் தின்றான் என்பதில் தின்றான் என்பது என்ன சொல்? அவன் தின்றான் திண்ணையில் தூங்கினான் என்பதில் தின்றான் என்பது உருவத்தில் எச்சொல்லைப்போலிருக்கிறது, அர்த்தத்தில் எச்சொல்லைப்போலிருக்கிறது? இவ்வாறு முற்றுப்போற் காணப்பட்டு எச்சப்பொருள் படுவதற்கு என்ன பெயர் வைக்கலாம்?

2. பின்வரும் முற்றெச்சங்களைக் காட்டி அவை ஒவ்வொன்றும் என்ன வினைமுற்று என்ன எச்சப் பொருள் படுகிறது என்று சொல்லுங்கள் —

(1) புலவன் அரசனைக் கண்டான் வணங்கினான்.
(2) வென்றான் வீரன் போரில் விளங்கினான்
(3) இராமன் வில்லினன் வந்தான்.
(4) வில்லினன் இராமன் வந்தான்.
(5) வந்தான் மனுஷன் ஏன் வாய்திறப்பான்?

(6) அவன் பாடுபட்டான் பலன பெறறான.
(7) கடு நடையினன கந்தன முநதினன.
(8) கநதன கடுநடையினன முநதினன.
(9) அறறததது கழுதை எடுததது ஓடடம.
(10) நான் சென்றேன கண்டேன வென்றேன.

தெரிநிலை வினைமுறறு வினையெசசமாவதறகும பெயரெசசமாவதறகும, குறிபபு வினைமுறறு வினையெசசமாவதறகும பெயரெசசமாவதறகும தனித்தனி வாககியஙகள உதாரணமாகச சொல லுஙகள.

## பாடம 6.

1. அவன குதிரையை நடககச செயதான என்பதில நடககச்செய்தான என்னும இரணடு சொறக ளுககும ஒரே வினைமுறறு என்ன? அவன குதிரையை நடததினன், அவன நடநதான எனபவறறில ஒரு பொருள தன வினையைச செய்வதைக காட்டும் வினை எது, ஒரு பொருள பிற ஒரு பொருளை வினைசெய்யச செயவதைக காடடும வினை எது? தன வினையை ஒரு பொருள செயவதைக காட்டும் வினையை என்ன வினை என்னலாம? இதறகு இப பெயரவைத தால, பிறபொருளை வினைசெயயச செயவதைக காட்டும் வினைககு எபபெயர வைககலாம?
2 நடநதான, நடததினன எனபவறறில தன வினை எது, பிறவினை எது? தனவினைப பகுதி என்ன, பிறவினைப பகுதி என்ன? அத தன்வினைப

பகுதி என்னமாறுதல் அடைந்து அப்பிறவினைப் பகுதி ஆயிற்று?

பின்வரும் ஒவ்வொரு தன்வினைப் பகுதிக்கும் பிற வினைப்பகுதி சொல்லி அந்த தன்வினைப் பகுதிகள் என்ன என்ன மாறுதலடைந்து பிறவினைப் பகுதிகள் ஆகின்றன என்று காட்டுவதுமல்லாமல், அந்த அந்தப் பகுதியிலிருந்து உண்டான ஒரு வினைமுற்றையுடைய ஒவ்வொரு வாக்கியமும் சொல்லுங்கள் — உடு, வெளு, பா, எழு, அழி, உருள், இடு, மாய், பாய், பயில், துயில், திரி, விடு, படி, கரி, தோன்று, நகு, கெடு, சரி, வா, ஆடு, உடை, நனை, ஒடி, முறி, தேய், திருந்து, தா, அசை, நோ, மறை, அலை, வளை, சோ, ஆறு, தகா, மடி, ஒழி, அவி, தணி, நில, கட, செல, நீங்கு, இறங்கு, உண், காண், மீள், நீள், கலங்கு, பொருந்து, விலகு, முடங்கு, தேர், சா, கூடு, மாறு, முயல், கல், அனுப்பு

மேலே காட்டிய பகுதிகளில் பிறவினைப் பகுதிகள் ஆகும்போது மாறாமல் நிற்பவை எவை? தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவான இந்தப் பகுதிகளிலிருந்து இரண்டு முற்றுகளும் உண்டானால் அவற்றுள் மாறுதல்கள் உண்டா? என்ன என்ன மாறுதல்கள்?

தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவான வினைமுற்றுகள் மேலே சொன்ன பகுதிகளில் எவற்றிலிருந்து உண்டாகின்றன?

6. எந்த எந்தத் தன்வினைப் பகுதியின் முதல் எழுத்தையும் பிறவினைப்பகுதியாகும்போது மாற்ற வேண்டியிருக்கிறது ?

7. கடைசியில் ஒரு புது எழுத்துச் சேர்ப்பதால் பிறவினைப்பகுதிகள் ஆகின்ற தன்வினைப் பகுதிகள் எவை ?

8. கடைசி எழுத்தை இரட்டிப்பதால் பிறவினைப் பகுதிகள் ஆகிற தன்வினைப்பகுதிகள் சில சொல்லுங்கள்.

9. இடையிலுள்ள ஒரு எழுத்தை வேறொரு எழுத்தாக மாற்றுவதால் பிறவினைப் பகுதிகள் ஆகிற தன்வினைப்பகுதிகள் எவை ?

10. தன்வினைப்பகுதிகள் எந்த எந்த விதங்களில் பிறவினைப் பகுதிகள் ஆகும் ? ஒவ்வொரு உதாரணமும் வேண்டும்.

---

## பாடம் 7.

ராசன் நின்றான், தச்சன் மரத்தை வெட்டினான் என்னும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் கர்த்தா என்ன, அக்கர்த்தா செய்த தொழில் என்ன, அக்கர்த்தா செய்த தொழில் அக்கர்த்தாவிடத்திலேயே நின்று விடுகிறதா, அல்லது வேறொரு பொருளின்மேல் சென்றிருக்கிறதா என்று சொல்லுங்கள். கர்த்தாவினுடைய தொழில் எப்பொருளின்மேலே செய்யப்பட்டதோ அப்பொருள் சொல்லப்பட்டிருக்கிற வாக்கியம் மேலே வந்துள்ள இரண்டில் எது, அப்பொருள் குன்றிய,

அதாவது இல்லாத, வாக்கியம் எது? செய்யப்படுபொருள் குன்றிய வாக்கியத்தின் வினை எது? செய்யப்படுபொருள் குன்றிய அவ்வினையை என்ன வினை யென்னலாம்? செய்யப்படுபொருள் குன்றாத வாக்கியத்தின் வினை எது? செய்யப்படுபொருள் குன்றாத அவ்வினையை என்ன வினை யென்னலாம்?

2. செய்யப்படு பொருள் குன்றிய வினையுடைய சில வாக்கியமும் செய்யப்படு பொருள் குன்றாவினையுடைய சில வாக்கியமும் சொல்லுங்கள்.

3. முன்னே சொன்ன தன்வினைகளைக் கவனித்து, தன் வினைகள் எல்லாம் செய்யப்படுபொருள் குன்றிய வினைகளா, குன்றா வினைகளா என்று சொல்லுங்கள்.

4. பிறவினைகள் எப்போதும் எவ்வினைகளாயிருக்கும்? ஏன்?

5. தச்சன் மரத்தை வெட்டுவான், அவன் கடிதத்தை எழுதுவான், நாய் புலியைக் கடிக்கும் என்னும் வாக்கியங்களிலுள்ள ஒவ்வொரு வினைமுற்றுக்கும் பதிலாக அவ்வினைப் பகுதியிலிருந்து உண்டான ஒரு தொழிற்பெயரும், எல்லா வாக்கியங்களுக்கும் பொருந்தக்கூடிய ஒருவினை முற்றும், வைத்து வாக்கியங்களைச் சொல்லுங்கள்.

6. அதிலிருந்து எல்லாவினைகளுக்கும் பொது வினை எது என்று தெரிகிறது?

7 ஐந்தாவது கேள்வியில் வந்த ஆறு வாக்கியங்களில் ...ள்ள காத்தாவை மூன்றும்

வேற்றுமைக் கர்த்தாவாக மாற்றி வாக்கியத்தைச் சொல்லுங்கள்

8. வாக்கியத்தில் கர்த்தா மூன்றாம் வேற்றுமையாயிருந்தால் ஒவ்வொரு வினைமுற்றிலும் வரும் புதுச் சொல் எது? படு கோலை என்ன கோல் என்கிறோம்? அப்படியே படுவினையை என்ன வினை என்னலாம்? எல்லா வினைக்கும் பொதுவினை எது என்று பார்த்தோம்? ஆகையால் வெட்டப்படும், எழுதப்படும், கடிக்கப்படும் முதலான பாட்டு வினைகளைப் பொதுவாக என்ன பாட்டு வினைகள் என்னலாம்?

9. அவற்றிற்கு அப்பெயரை வைத்தால் வெட்டுவான், எழுதுவான், கடிக்கும் முதலான பாட்டு வினைகள் அல்லாத வினைகளுக்கு என்னபெயர் வைக்க வேண்டும்?

10 செயப்பாட்டுவினை வாக்கியத்தில் வரும்போது கர்த்தா என்ன வேற்றுமையிலிருக்கும், செயப்படுபொருள் என்ன வேற்றுமையிலிருக்கும், செய்வினை வரும்போது அவைகள் என்ன என்ன வேற்றுமைகளிலிருக்கும்?

11. பின் வாக்கியங்களில் செய்வினையைச் செயப்பாட்டு வினையாகவும், செயப்பாட்டுவினையைச் செய வினையாகவும் மாற்றுங்கள் —

(1) புலி புல்லைத் தின்றது.

(2) நாம் கல்லைக் காய்ச்சிக் குடிக்கலாமா?

(3) பல்லைக் காட்டாதே.

(4) மருத்துவன் மருந்து கொடுத்தான்.

(5) மரம் தச்சனால் வெட்டுண்டது.

(6) மகனே, வேந்தனால் நீ வெட்டப்பட்டாய்.
(7) சேரன் சோழனால் கட்டுண்டான்.
(8) பெருவாழ்வு பெறுவாய்.
(9) ஒரு நாள் உணவை ஒழி என்றால் ஒழியாய்.
(10) நான் எதைச் சொன்னாலும் நீ அதைக் கேளாய்.

12 படு என்னும் சொல்லைத்தவிர செயவினையோடு சேர்ந்து செயப்பாட்டு வினையை உண்டாக்கும் சொல் வேறு ஏதாவது உண்டா?

13. புலி கொன்ற யானை, மீன் விழுங்கிய பையன் என்னும் வாக்கியங்கள் என்ன என்ன அர்த்தங் கொள்ளும்? கொன்ற, விழுங்கிய என்பன செய வினைகளா, செயப்பாட்டு வினைகளா?

13. செயவினைக்கும் செயப்பாட்டு வினைக்கும் பொதுவான சில வினைகள் சொல்லி அவற்றை வாக்கியங்களில் அமைத்துக் காட்டுங்கள்

---

## பாடம் 8.

1 நாளை நீ வருவாயா என்னும் கேள்விக்கு என்ன என்ன வினைமுற்றை உத்தரவாகச் சொல்லலாம்? இவ்வினைமுற்றுக்களில் எது உடன்படுதலைக் காட்டுகிறது, எது அதற்கு எதிர்மறுத்தலைக் காட்டுகிறது? உடன் பாட்டு அர்த்தத்தில் வரும் வினையை என்ன வினை என்னலாம், எதிர்மறை அர்த்தத்தில் வரும் வினையை என்ன வினை என்னலாம்?

2. பின்வரும் உடன்பாட்டு வினைகளுக்கு எதிர்மறைகள் வேண்டும்.—வந்த, வந்து, செய்வான்,

போனான், தின்று, கரைந்து, நில், போய், கண்டு, பார்ப்பான.

3. செய்திட்டான், வந்துவிட்டான், எழுந்திருந்தான், படித்துக்கொண்டான் முதலிய வினைகளிற் பகுதி எவை? வேறே ஒரு வினைக்குத் துணையாக வருகிற இடு, விடு, இரு, கொள் முதலிய வினைகளை என்ன வினைகள் என்னலாம்?
4. இம்மாதிரியான துணை வினைகளைப் பெற்றுவரும் சில வினைகளைச் சொல்லுங்கள்.

---

## பாடம் 9.

1. வகுப்பில் நிற்க ஒருவனை நான் ஏவ விரும்பினால் அவனைப் பார்த்து நான் என்ன சொல்வேன்? அதில் ஏவலைக் காட்டுகின்ற சொல் எது? அது என்ன சொல்? ஏவலைக் காட்டுகின்ற வினைமுற்றை என்ன வினைமுற்று என்னலாம்?
2. நீ நில் என்பதுபோல நான் நில், அவன் நில் என்று சொல்லலாமா, ஏன்? ஏவல் வினைமுற்று, ஆகையால், எந்த இடத்தில் மாத்திரம் வரும்?
3. பின் வாக்கியங்களிலுள்ள ஏவல் வினை முற்றுக்களையும் அவற்றின் ஆதாரங்களையும் சொல்லுங்கள் —
   (1) நம்பீ, நாளை வருதி
   (2) கண்ணா, நீ பால் உண்ணாய்.
   (3) தெய்வம் இகழேல்.

(4) தீயாரைச் சேராதே.
(5) பொல்லா அறிவுடையீர், நீர் போமின்
(6) நான் சொல்வதைக் கேளீர்
(7) ஒரு நாளும் பொய் சொல்லாதே
(8) நீர் விரைவாக உண்ணும்
(9) உண்மையை உண்மை எனல.
(10) இன்மையை உண்மை எனல.

4. பின்வரும் வினைகளிலிருந்து உண்டாகக்கூடிய உடன்பாட்டு ஏவல் ஒருமை வினைமுற்றும் பன்மை வினைமுற்றும், எதிர்மறை ஏவல் ஒருமை வினைமுற்றும் பன்மை வினைமுற்றும் சொல்லுங்கள் - அழுதான், தின்றான், வந்தேன், கேளான், பாடினை, செய்யும், நடக்கிறது, காணும், படியான்

5. வினைகளின் பகுதிகள் தான் எப்போதும் உடன்பாட்டு ஒருமை ஏவல் வினைமுற்றுக்கள் ஆகின்றன என்று சொல்லலாமா? ஏன்?

6. குறிப்பு வினைமுற்றுக்கள் சம்பந்தமாக ஏவல் உண்டாகுமா, உண்டாகாதா என்று காரணத்தோடு சொல்லுங்கள்.

7. நீ வந்தாய், நீர் வந்தீர் என்னும் வாக்கியங்களில் வினைமுற்றுக்கள் எந்த இடத்திற்கு உரியவை? ஏவல் எந்த இடத்திற்கு உரியது என்று பார்த்தோம்? முன்னிலையில் வரும் வந்தாய், வந்தீர் என்னும் வினைமுற்றுக்களை என்ன வினைமுற்றுக்கள் என்னலாம்?

8. ஏவல் வினைமுற்று என்ன பொருளில் வரும்? முன்னிலை வினைமுற்று அப்பொருளில் வருமா பாருங்கள்

9. ஏவல் வினைமுற்றுக்கும் முன்னிலை வினைமுற்றுக்கும் உள்ள வித்தியாசங்கள் எவை?

10. மேலே நாலாங்கேள்வியிற் சொன்ன வினைகளை ஒவ்வொன்றிலுமிருந்து முன்னிலை ஒருமை வினைமுற்று ஒன்றும் முன்னிலைப் பன்மை வினைமுற்று ஒன்றும் சொல்லுங்கள்.

## பாடம் 10.

1. நீ எழுது, நீ எழுதுக, என்னும் வாக்கியங்களில் மரியாதையாகக் கட்டளையிடுவது எந்த வாக்கியத்தில் எந்த வினை? எழுது என்னும் ஏவல் வினைமுற்றுக்கும் எழுதுக என்னும் மரியாதையான ஏவலைக் காட்டும் வினைமுற்றுக்கும் உருவத்தில் என்ன வித்தியாசம்?

2 ஏவல் என்ற சொல்லுக்கும் வியம் என்ற சொல்லுக்கும் ஒரே அர்த்தம் இருப்பதாலும், வெறும் கட்டளையைக் காட்டுகிற எழுது என்பதைப் போன்ற வினைகளுக்கு ஏவல் வினை என்று நாம் பெயர் வைத்திருப்பதாலும், மரியாதையாக வியம் கொள்ளுதலையுடைய எழுதுக என்பதைப் போன்ற வினை முற்றுக்களை என்ன வினை முற்றுக்கள் என்னலாம்?

3. பின் வாக்கியங்களில் ஏவல் வினைமுற்றுக்களையும் வியங்கோள் வினைமுற்றுக்களையும் காட்டி அவை என்ன என்ன பொருள்களில் வந்தன என்று சொல்லுங்கள்.—

நீ போ, நீ வாழ்க, நீ வருக, நீ வா, நீ சா, நீ சாக, நீ காண்க, நீ காணாய், நீர் போக, நீர் போமின்

நீ வளர, நீ வளா, நீ வாழ், நீ வாழவேண்டும், நீர் உண்க, நீர் உண்ணும், நீர் வாரீர், நீர் வருக, நீ வாழிய, நீ வாழ, நீர் வாழுமின், நீர் வாழிய

4 நான் வாழ்க, நாம் வாழ்க, அவர் வாழ்க, அவன் வாழ்க, அவள் வாழ்க, அது வாழ்க, அவை வாழ்க, என்று சொல்லலாமா? வாழ்க என்பது என்ன வினைமுற்று? அது என்ன என்ன இடத்தில் வந்தது? ஏவல் வினைமுற்று எந்த இடத்தில் வரும்?

5 ஏவல் வினைமுற்றுக்கு ஒருமைப்பால் பன்மைப்பால் உண்டா? வியங்கோள் வினைமுற்றுக்கு அவை உண்டா?

6 ஏவலுக்கும் வியங்கோளுக்கும் உள்ள வித்தியாசங்கள் எவை?

## பாடம் 11.

1 செய் என்னும் வினைப்பகுதியிலிருந்து உண்டான கடந்த காலத்தைக் காட்டுகிற ஒரு வினைமுற்றும் நடக்கிற காலத்தைக் காட்டுகிற ஒரு வினைமுற்றும் வரப்போகிற காலத்தைக் காட்டுகிற ஒரு வினைமுற்றும் சொல்லுங்கள்.

2 இறந்த, அதாவது கடந்த, கால வினைமுற்றை என்ன கால வினைமுற்று என்னலாம்? நிகழ், அதாவது நடக்கிற, கால வினைமுற்றை என்ன கால வினைமுற்று என்னலாம்? எதிர், அதாவது வரப்போகிற, கால வினைமுற்றை என்ன வினைமுற்று என்னலாம்?

3. செய்தான், செய்கிறான், செய்வான் என்னும் வினைமுற்றுக்கள் காட்டும் காலங்கள் எவை? அவ் வினைமுற்றுக்களிற் பகுதி என்ன? அது எதைக் காட்டுகிறது? பகுதிக்கு வேறு பெயர் என்ன? அம்முற்றுக்களில் விகுதி என்ன? அது எதைக் காட்டுகிறது? விகுதிக்கு வேறு பெயர் என்ன? முதனிலையும் கடைநிலையும் போக அம்முற்றுக்கள் ஒவ்வொன்றிலும் இருப்பது எது? அது முதனிலைக்கும் கடைநிலைக்கும் எப்பக்கத்தில் நிலை கொண்டிருக்கிறது? அதற்கு, ஆகையால், என்ன பெயர் சொல்லலாம்?

4. முதனிலை தொழிலையும் கடைநிலை பாலையும் காட்டுமானால் மேற்சொன்ன வினைமுற்றுக்களில் காலத்தைக் காட்டுவது எதுவாயிருக்க வேண்டும்? அந்த மூன்று வினைமுற்றுக்களில் எந்த எந்த இடைநிலை எந்த எந்தக் காலத்தைக் காட்டுகிறது?

5. பின்வரும் வினைமுற்றுக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள இடைநிலையையும் அதுகாட்டும் காலத்தையும் சொல்லுங்கள் :—உண்டான், உண்பான், தின்கிறான், செய்கிறான், ஓடினார், ஓடியது, போனாள், போயது, செய்கின்றாள், வருவேன், செய்கேன்.

6. இறந்தகால இடைநிலைகள், நிகழ்கால இடைநிலைகள், எதிர்கால இடைநிலைகள் இவற்றையெல்லாம் சொல்லுங்கள்.

7. அவை உண்ணும், நீர் உண்ணும், அரசன் வாழ்க என்னும் வாக்கியங்களில் வினைமுற்றுக்கள்

எவை? அவை காட்டும் காலங்கள் எவை? இவ் வினைமுற்றுக்களில் இடை நிலைகள் உண்டோ? அவற்றில் காலத்தைக் காட்டுகின்றது அப்படி யானால் எது?

8 இடைநிலையைத் தவிர வினைமுற்றுக்களில் காலத் தைக் காட்டுவது வேறு எது? உதாரணம் சொல்லுங்கள்

9 புக்கான், போட்டான், பெற்றுள் என்பவை எக் கால வினைமுற்றுக்கள்? அவற்றின் பகுதி விகுதிகள் எவை? அவற்றின் விகுதிகள் காலம் காட்டக் கூடியவையா? எவை அம்முற்றுக் களின் காலத்தைக் காட்டுகின்றன? அவற்றை இடைநிலைகள் என்று சொல்லிவிடக்கூடாதோ? ஏன்?

10 பகுதியில் மெய் இரட்டித்துக் காலம் காட்டுகிற வேறுசில வினைமுற்றுக்கள் சொல்லுங்கள்

11. வினைமுற்றுக்களில் பகுதிமெய் இரட்டிப்பதால் காலம் தெரியுமானால், அப்படித் தெரிகின்ற காலம் எதுவாயிருக்கும்?

12. இப்போது, வினைமுற்றுக்கள் காலங்களைக் காட்டு கிற பலவிதங்களை எல்லாம் உதாரணங்களோடு சொல்லுங்கள்.

13 நட, வா, போ, உண், செய் என்னும் பகுதிகளி லிருந்து உண்டாகும் முக்காலத்து உடன்பாட்டு வினையெச்சம் பெயரெச்சங்களும் முக்கா லத்து எதிர்மறை வினையெச்சம் பெயரெச் சங்களும் சொல்லுங்கள்.

## பாடம் 12.

1 கடிக்கிற நாய் ஒன்று இருக்கிறது; அது முன்னே பலமுறை கடித்தது; இன்னும் அது அநேகமாய்க் கடிக்கும். கடித்த, கடிக்கிற, கடிக்கும் நாய் என்று சொல்லாமல், தொகையாக அதை என்ன நாய் என்னலாம்? கடித்த, கடிக்கிற, கடிக்கும் என்பவை என்ன சொற்கள், அவை எதைத் தழுவுகின்றன? அவை காலத்தைக் காட்டுகின்றனவா? கடிநாய் என்பதில் காலம் தெரிகிறதா? கடித்த, கடிக்கிற, கடிக்கும் என்னும் காலம் காட்டும் பெயரெச்சங்களில் கடி என்பது என்ன உறுப்பாகும்? பெயரெச்சம் என்பது பெயரா, வினையா? இந்த வினை காலம் தெரியாதபடி தொகையாகி, அதன் பகுதி மாத்திரம் அது தழுவுகிற பெயர்ச் சொல்லுக்கு முன்னே நின்று, மூன்று காலத்தையும் காட்டக்கூடியதா யிருக்குமானால், இந்த வினைத் தொகையை என்ன தொகை என்னலாம்?

2. முன்னே மா ஆட்டிய உரல், இப்போது ஆட்டுகிற உரல், இனி ஆட்டும் உரல், கோ முன்னே ஏறிய கழுதை, இப்போது ஏறுகிற கழுதை, இனி ஏறும் கழுதை, முன்னே ஆடிய பாம்பு, இப்போது ஆடுகிற பாம்பு, இனி ஆடும் பாம்பு, இவற்றிற்கு வினைத்தொகைகள் சொல்லுங்கள்.

3. வேறு சில வினைத்தொகைகள் சொல்லி அவற்றின் விரியும் காட்டுங்கள்.

4. கடி என்பதா, கடி நாய என்பதா, வினைதொகை? என ?

5. வினைதொகைக்கும நீஙகள முன்னே படிதத பல தொகைகளுககும உள்ள விததியாசஙகளைச சொலலுஙகள்.

## பாடம் 13.

1. படிததவாகளும் சாமி இருககிறா என்கிறாகளே, அவா முனனே இல்லையோ, இனிமேல இருக்க மாட்டாரோ, இபபோது மாததிரம் இருககிறாரோ? எக்காலததிலும் இருககிறவரை நிகழ காலததிற சொலவது வழுவா இல்லையா? எனறாலும் இப்படிபபட்ட கால வழுவைப் பெரியோரும் அமைததுக கொள்வதால அதறகு என்ன பெயா வைககலாம? இககால வழுவமைதி ஏன் வநதது?

2 இருபது அல்லது முபபது வருஷம் பொறுதது நீஙகள் இப்பள்ளிககூடததிறகு வநது, நாஙகள இஙகேதான் விளையாடுவோம, நாஙகள இங்கே தான தமிழ்ப்பாடம படிக்கிறது, எனறு பலா சொலலுகிறமாதிரி சொலலுவீரகளானால, எநதக காலததிறகு எநத எநதக காலம வழுவமைதியாக வநதது? இககால வழுவமைதி வநததறகு என்ன காரணம?

3. பின்வரும வாககியஙகளில எககாலததிறகு எககாலம வழுவாக வநது எககாரணததால் அமைதி ஆயிறறு என்று சொலலுங்கள .—

(1) அந்த மருநதைத் தின்றால் சாகிறாய்.
(2) பூனையே, என் கிளியை நீ தொட்டால செததாய்.
(3) எறும்பு முட்டைகொண்டு திடடை ஏறினால் மழை பெய்கின்றது.
(4) கடைக்குப் போய்வராமறபோனால், பயலே, உன்காலை ஒடிததிடடேன.
(5) நனறாயப படிததவர் பரீக்ஷையில் தேறுகிறார்.
(6) வடக்கே இமயமலை இருககிறது
(7) காட்டிற போனவள காது அறுபடுகிறாள்.
(8) மனததை அடககிவிடடால மோக்ஷத தின திறவுகோல கையிலிருக்கிறது.
(9) நாளைககு ஊருக்குப் போகிறேன.
(10) வநதேன், வந்தேன (உணடுகொணடிருக குமம வேலைக்காரன கூபபிட்ட எசமானுக்குச சொன்னது.)
(11) வருகிறேன். (கிணறறில் தண்ணீர இறைககும் பெண் அழைதத தாய்க்குக கூறியது.)
(12) தாமிரவருணி ஆற்றின் கரையில் ஆழ்வார திருநெல்வேலி இருக்கிறது.

4. கால வழுவமைதி என்ன என்ன காரணஙகளால் வரும என்று சொல்லி வேறு உதாரணஙகள காட்டுங்கள்.

## பாடம் 14.

1 பெயர்ச் சொற்களுக்கு என்ன என்ன உண்டென்று பார்த்தீர்கள்? அவை எல்லாம் வினைச் சொற்களுக்கு உண்டா என்று பார்த்துச் சொல்லுங்கள்.

2. வினைகளுக்கு இல்லாத ஏதாவது பெயர்களுக்கு உண்டா, பெயர்களுக்கு இல்லாத ஏதாவது வினைகளுக்கு உண்டா?

3. கொஞ்சம் பெயர்களைப்போலவும் கொஞ்சம் வினைகளைப்போலவும் இருக்கும் சொற்கள் இருந்தால் அவை எவை என்றும், பெயர்களுக்கும் வினைகளுக்கும் உள்ள எல்லாம் அச்சொற்களுக்கு உண்டா என்றும் சொல்லுங்கள். காலம் காட்டும் பெயர்கள், ஆகையால், எவை என்று சொல்லி உதாரணம் காட்டுங்கள்.

4 ஒவ்வொரு வகையைச் சேர்ந்த தெரிநிலை வினை ஒன்று சொல்லி, அது உயர்திணைப் பெயரையும் அஃறிணைப் பெயரையும் போய்ச் சேருமா என்று பார்த்து, எவ்வகையான தெரிநிலை வினைகள் இரண்டு திணைகளுக்கும் பொது என்று சொல்லுங்கள்.

5 அப்படியே பார்த்து எவ்வகையான குறிப்பு வினைகள் இருதிணைக்கும் பொது என்று சொல்லுங்கள்.

6. அப்படியே ஆராய்ந்து மூன்று இடங்களுக்கும் பொதுவான சில தெரிநிலை முற்றுக்களையும் குறிப்பு முற்றுக்களையும் காட்டுங்கள்.

7. நானும் அவனும்; நீயும் நானும்; அவனும் நீயும்; நாயும் பூனையும், (முருகா,) நீயும் (வேலா,) நீயும், என்னும் இரட்டை எழுவாய்களுககு எற்ற பயனிலைகள் சொல்லி, எந்த எந்த இடத்தைச் சேர்ந்த எழுவாய்களுக்கு எந்த இடத்து வினைமுற்று பயனிலையாக வரும் என்று காட்டுங்கள்.

# பாகம் III.

## பாடம் 1.

1. வேல் என்பது என்ன சொல்? அச்சொல்லிடம் எச்சிறுசொற்கள் சேர்வதால் வேலன், வேலனால், வேலனாலும், வேலனாலுமே என்னும் பெரிய சொற்கள் உண்டாகின்றன? செய் என்பது என்ன சொல்? அச்சொல்லிடம் எச்சிறு சொற்கள் சேர்வதால் செய்தான், செய்தனன் என்னும் பெரிய சொற்கள் உண்டாகின்றன? மேலே பார்த்த சிறு சொற்கள் எப்போதாவது தனித்து வருமா? அவைகளுக்குத் தனியாக அர்த்தம் உண்டா?

2. தமக்கு என்று அர்த்தம் இல்லாதவைகளும் தனியாக வாராதவைகளும் ஆகிய அச்சிறுசொற்கள் எச்சொற்களிடை, அதாவது எச்சொற்களிடம், சேர்ந்துவருகின்றன? இப்படி (பெயர் அல்லது வினை) இடைவருகிற அம்மாதிரியான சொற்களை என்ன சொற்கள் என்னலாம்?

3. பின்வருபவற்றில் உள்ள இடைச் சொற்களைக் காட்டுங்கள் —

இக்குதிரை, நாயா, குன்றோ, நீரை, பலவற்றை, ஒன்றேகால், நெஞ்சம், மரத்தினுடைய, நக்கீரன், எக்கழுதை, நப்பின்னை, மண்ணாங்கட்டி, அத்தலை, வண்டின்கால், அன கன்று, நீதான் வா, ஊராவது வீடாவது தா, நீயாயினும் போ,

நாள்தோறும் படி, இனி வா, சீ கழுதை, சும்மா வா, ஆ மடையன், ஐயோ இறந்தான், முன் நட, அங்குக் காண், இங்குக்காண், இன்று போ, ஆண்டுசெல், பண்டைக்காலம், பெண் எனப்போயிற்று, உடல் உயிர் என்று இரண்டு, மற்றைப் பிள்ளை, பின் பேசு, நீர்தாம், யாகொல், அந்தம்ம, நன்றரோ, ஆடுமாதோ, காடுமன, அன்று கொடு, யாவன், எது, மற்றொன்று, அங்கு நட, சோறுமன்றே, பணியுமாம், மகிழ்ந்தனை போலும், உயிரும் உடலும்

---

## பாடம் 2.

பின்வரும் வாக்கியங்களில் ஏ என்னும் இடைச் சொல் என்ன என்ன பொருள்களைக் காட்டுகின்றது என்று நன்றாய் நினைத்துச்சொல்லுங்கள் —

(1) இவனே முப்பது பிள்ளைகளிலும் பெரியவன்.

(2) நான் ஒருநாளும் அப்படிச் செய்யமாட்டேனே.

(3) நீயே செய்தாய்?

(4) தெய்வமே, துணைசெய்.

(5) நாயே இச்சோற்றைத் தின்றது.

(6) காய்ச்சல் வந்தால் கரும்பே கசக்கும்.

(7) அவன் நல்லாச் செய்வானே!

(8) என் புஸ்தகம் காணோமே!

(9) காயே கனியே கீரையே கிழங்கே எல்லாம் கொண்டுவா.

(10) அவன என் அண்ணனே, அலல ; தம் பியே, அல்ல, என் மாமன்.

(11) நாம் மனையில நன்முய் ஆட நிலவும வநததே !

(12) சாவாரை யாரே தவிரபபவா ?

(13) ஏ ! இநத இனிதத வாயஃா எல்லாரும் பாருஙகள் !

(14) கொனறைவேநதன செலவன அடி இஃா என்றும் ஏததித தொழுவோம் யாமே

2. பின்வரும ஒவவொரு பொருளையும காட்டும எ காரம் மேல் வாக்கியஙகளில எது ? —உவபபு, அதாவது சநதோஷம, உயாவு சிறப்பு. அதா வது உயாவு மிகுதி ; பிரிநிலை, அதாவது பல வறறிலிருநது ஒனறைப் பிரிதது நிலைநிறுததல, தேறறம், அதாவது நிசசயம் ; எதிாமறை, அசை, அதாவது பெயரோடு அல்லது வினை யோடு சோநது நின்ருலும் யாதொரு பொரு ளும் இல்லாமல் அசைதது ஓசையை மாத திரம் உண்டயது , இகழசசி ; கழிவு, அதாவது ஒனறு கழிநதது அல்லது போய்விடடதறகு வருநதப்படல , வினு , விளி , எண், அதாவது எணணுதல் ; ஈறறு அசை, அதாவது பாட்டுக களின் ஈறறில் அல்லது கடைசியில் அசையா யிருததல் ; தெரி நிலை, அதாவது மனததில நன் முய்த தெரியும்படி ஒனறை விளகக நிலைநிறுதல; இழிவு சிறப்பு, அதாவது இழிவின மிகுதி.

3. பிரிநிலை, வினு, எண், ஈறறசை, தேறறம், உயாவு ' சிறப்பு, இழிவு சிறப்பு, எதிர்மறை, கழிவு,

அசை, உவப்பு ஏகாரங்களுள்ள தனித்தனி வாக்கியங்கள் சில சொல்லுங்கள்.

---

## பாடம் 3.

1. பின்வரும் ஓகாரப் பொருள்களைச் சொல்லுங்கள் —

(1) ஓ! நாம் ஆட நிலவு வந்தது!

(2) ஓ! பெரியர் அவர்!

(3) ஓ! குடியன் அவன்!

(4) நீ செய்வாய், அவன் செய்வான், நானோ செய்யேன்.

(5) நீயோ செய்தாய்?

(6) நான் அப்படிச் செய்வேனோ?

(7) அவன் என் அண்ணனோ, அல்ல; தம்பியோ, அல்ல; என் மாமன்.

(8) ஓ! என் புஸ்தகம் காணோம்!

(9) காயோ கறியோ கீரையோ கிழங்கோ எல்லாம் வேண்டும்

(10) ஓ! இராமா, வா.

(11) உன்னைத் தேடப்போகிறது யாரோ?

(12) நாயோ நரியோ இங்கு வந்திருக்க வேண்டும்.

(13) படிக்கவோ வந்தான்! (வகுப்பில் விளையாடும் பையனைப்பற்றிச் சொன்னது)

(14) வாயினிற் புகுவேல் பறித்து வலக்கையோடு நிலத்திடைச் சாயும் மற்றவா காளம் ஊதினர்தம்மை ஒத்தமை காணமினோ. (பாட்டு)

2. ஒழி இசை, அதாவது ஒரு சொல்லை ஒழிந்தது அதற்கு எதிரான இசையை அல்லது சொல லைக் காட்டும், ஓகாரம் மேல வாக்கியஙகளில் எது?

3. வினு, இழிவு சிறப்பு, உயாவு சிறப்பு, எதிரமறை, தெரிநிலை, கழிவு, அசை, ஈறறு அசை, பிரிநிலை, ஐயம் அல்லது சந்தேகம், உவப்பு, விளி, எண், ஒழியிசை இவற்றைக் காட்டும ஓகாரங்களை மேல் வாககியஙகளிற காட்டுவதுமல்லாமல அவ் வோகாரங்களுடைய வேறு வாககியஙகளும சொல்லுங்கள.

---

## பாடம் 4.

1. முப்பது பிள்ளைகளும் வநதிருக்கிறார்கள் என்று ஒரு வகுப்பைபபற்றி சொன்னால அவவகுப்புப் பிளளைகள் முறறும எததனைபோ? அவ்வாககி யததிலுள்ள எதனால் அது தெரிகிறது?

2. முறறும் காட்டுகிற உமமையை என்ன உம்மை என்னலாம்? முறறு என்பதறகு எதிரசொல எனன? முறறு உம்மை என்பதறகு எதிர சொல் என்ன?

3. நாம் இருவரும் மதுரைக்குப் புறப்படுவோம என் பதில் வநதது என்ன உம்மை? நீர மதுரைக குப் புறபபட்டால நானும் வருகிறேன் என்பதில் வநதது என்ன உமமை? ஏன்? நான் என்ப திற குறிதத பொருள சொலலப்பட்ட காலத திறகு முன்னே பின்னே நீர் என்பதிற குறிதத 'பொருள் சொலலப்பட்டது? இறந்தது அல்

லது முந்தியது ஒன்றைத் தழுவிய எச்ச உம்மையை என்ன எச்ச உம்மை என்னலாம்? முன் வாக்கியத்தின் கருத்தை நீரும் மதுரைக்குப் புறப்படும் என்று தொடங்கும் வாக்கியம் ஒன்றில் வைத்து முடித்துக் காட்டுங்கள். நீரும் என்பதிலுள்ள உம்மை வந்தது ஏன்? அது எப்பொருளைத் தழுவுகிறது? அப்பொருள் எக்காலத்திற் சொல்லப்படுகிறது? எதிரது அல்லது பிந்தியது ஒன்றைத் தழுவிய எச்ச உம்மையை என்ன எச்ச உம்மை என்னலாம்?

4. இருவகை எச்ச உம்மைகளும் முற்று உம்மையும் உள்ள தனித்தனி வாக்கியங்கள் சில சொல்லி ஒவ்வொரு உம்மையின் பொருளையும் விவரித்துக் காட்டுங்கள்.

5. ஏகாரத்துக்கும் ஓகாரத்துக்கும் உரிய எந்த எந்தப் பொருளில் உம்மை வரலாம் என்பதையும் ஆராய்ந்து உதாரணத்தோடு சொல்லுங்கள்.

6. இரண்டும் அரையும், பத்தும் ஒன்பதும், தந்தையும் தாயும், இரவும் பகலும், கபிலனும் பரணனும், குசனும் லவனும், சேரனும் சோழனும் பாண்டியனும் என்பவற்றைத் தொகை ஆக்குங்கள். நீங்கள் சொல்லிய தொகைகளில் தொக்கது எது? ஆகையால், இம்மாதிரியான தொகைகளை என்ன தொகை என்னலாம்?

7. வேறு சில உம்மைத் தொகைகள் சொல்வதுமல்லாமல் நீங்கள் படித்த மற்றத் தொகைகளுக்கும் இதற்கும் உள்ள எல்லா வித்தியாசங்களையும் ஆராய்ந்து சொல்லுங்கள்.

## பாடம் 5.

பின்வரும் ஏ, ஓ, உம், கொல் ஒவ்வொன்றாகரு பொருள் என்ன என்று காரணத்தோடு சொல் லுங்கள் :—

(1) என்னைத் தேடிவந்தது நீகொல?
(2) பட்டினம் போனது நீகொல் அவன கொல் அறியேன.
(3) இங்கு வந்தவர் யார்கொல்?
(4) பழகப் பழகப் பாலும புளியாதா?
(5) மழை பெய்தாலும் பெயயலாம்.
(6) மாணடார் வருவரோ.
(7) ஓ! கொடிது!
(8) பாண்டவா ஐவரும் நல்லவா.
(9) சோறுபோடும் என்னையே அநநாய் கடிக கும்.
(10) காலால இட்டவேலையைத் தலையாலே செய்கிறவன அவன்.
(11) என்றுகொல நான உன்னைத் திருமபக காணபது?
(12) நாம் அரிசிககே இநதப பாடுபடுகிறோம
(13) சோறு இடுஙகள, தணணீரும் வாருஙகள.
(14) அறிவுடையவனை அரசனும் விருமபுவான
(15) இன்று ஞாயிறுகொல் திஙகளகொல்?
(16) நான்கொலலோ உன பகைவன்?
(17) புலியும் கொலையும் களவும் தவிர.
(18) தோழனோடும ஏழைமை பேசேல்.
(19) பாாப்பானோ, அன்று, செட்டியோ, அனறு; அரசன.

(20) கடவுள் ஒருவர் உண்டே.
(21) இன்று ஞாயிறோ திங்களோ தெரியவில்லை.
(22) கற்றாரைக் கற்றாரே விரும்புவர்.
(23) கல்லைக் காற்று சுழற்றுங்கொல்?
(24) கல்வியிற கடலே போன்றவரும் உண்டு
(25) நெல்லுக்கு இறைதத நீர் புலலுககும் பொசியும்.
(26) கண் இரண்டும் ஒன்றையே நோக்காதோ.
(27) நாடுகொல் நகர்கொல் உமககு ஏற்றது?
(28) அம்மாடு மேயவோ போயிறறு!
(29) அவன் பிழைக்கவும் கூடும்.
(30) மணி ஒன்றும் இருக்கலாம் இரண்டும் இருககலாம்.
(31) புலவரும் புகழுவர் அநநாட்டை.
(32) சிரிப்பாயும நீயே, அழுவாயும நீயே, ஏவு வாயும் நீயே, ஏவல் செய்வாயும் நீயே; கொல்வாயும் நீயே, கொலையுண்பாயும் நீயே, உன மாயை யாரோ அறிவார!
(33) வாரததில ஏழு நாளும் வேலையில்லை.
(34) வெள்ளாட்டுபபால் நல்லமருநதும் ஆகும்.

2. ஒழியிசை, அசைநிலை, தெரிநிலை, எசசம், முறறு, ஆக்கம் இவறறை விளக்கிக்காட்டி உதாரணம் கொடுங்கள.

# பாகம் IV.

## பாடம் 1.

1. அக்கரை என்னும் சொல்லின் முதல் எழுத்தைத் தனியே உச்சரிக்க முடியுமா? இரண்டாவது எழுத்தை வேறு ஒரு எழுத்தின் உதவியுமில்லாமல உச்சரிக்க முடியுமா?

2. மெய், அதாவது உடம்பு, உயிர், இவற்றில எது தானாய் நடக்கக்கூடியது, எது தானாய் நடக்கக கூடாதது? அ, க் என்னும எழுத்துககளில எது உயிர்போலத்தானாய்நடப்பது, எது உடல போலத் தானாய் நடவாதது?

3. உயிரபோன்ற அ எனனும் எழுத்தை என்ன எழுத்து எனனலாம், மெய்போன்ற க என்னும எழுத்தை என்ன எழுத்து என்னலாம்?

4. அககரை எனபதில் மூன்றாவது எழுத்து ஒரு எழுத்தின ஒலியைககொணடதா, பல எழுத்துககளின் ஒலியைக் கொண்டதா என்று உச்சரித்துப் பாருஙகள். பல எழுத்தின் ஒலி இருந்தால் அவை எந்த எழுத்துக்கள்?

5. க என்பதறகு என்ன பெயா வைத்தோம, அ எனபதறகு எனனபெயர் வைத்தோம்? இந்த உயிரும் மெய்யும் சோநது உண்டான க என்னும் எழுததுககு என்ன பெயர் வைககலாம?

6. பின்வரும் சொறகளிலுளள உயிரெழுத்துக்களை எடுதது ஒரு வரிசையாயும் மெய்யெழுததுக

களை ஒரு வரிசையாயும் எழுதுஙகள்.—அக கரை, ஆஙகு, இசைசவிஞச, ஈட்டு, உண், ஊத தை, எநதை, எப்பம்வெய்யது, ஐயா செல்ல, ஒவ்வாத புகழ்கள், ஓவாதகறபு, ஔவையின்.

7. நீஙகள எழுதிய உயிரெழுததுககளையும் மெய் யெழுததுககளையும் எண்ணி ஒவவொனறும் எததனை எனறு சொல்லுஙகள.

8. ஒரு உயிரெழுதது தனிததனியாகப பதினெட்டு மெய்களோடும சோநதால எததனை உயிா மெய் எழுதது உண்டாகும? பனனிரணடு உயிரெ ழுததும அபபடித தனிததனியாய்ப பதி னெட்டு மெய்யோடும் சோநதால எலலாம சேர்நது எததனை உயிா மெய் எழுததுககள் ஆகும?

9 நெடுககாகப் பதினைு கோடுகளும் குறுக்காக இரு பது கோடுகளும் இழுதது இருநூறறு நாறபத தேழு வீடுகள கட்டி ஒவவொரு மெய்யெழுத தின எதிரில ஒவவொரு உயிரெழுததின கீழே அமமெய்யெழுதது அவவுயிரெழுததோடு சோ வதால் உணடாகும் உயிர் மெய்யெழுததை எழு துஙகள். (முதல வீட்டில் ஒனறும் எழுத ண்டாம)

## பாடம் 2.

1. பனனிரணடு உயிரெழுததுக்களிலும் இரணடு எழுததுக்களின் ஓசையை ஒன்றாய்க்கொண்ட எழுததுக்கள் இருந்தால அவை எவை என றும், அவை ஒவவொன்றும் எநத 'இரண்டு

எழுததுக்களின ஓசையைக கொண்டிருக்கின்றன என்றும் சொல்லுங்கள்.

2. அவை போக மறற உயிரெழுததுக்களில் நீண்ட ஓசையை யுடையவை எவை, குறுகிய ஓசையை யுடையவை எவை? இந்த நெட்டோசை கொண்ட எழுததுககளை என்ன எழுததுக்கள என்னலாம், குறளோசைகொண்ட எழுததுக களை என்ன எழுததுககள எனனலாம்?

3. எந்தனக் குறறெழுததுககள், எததனை நெட்டெழுததுககள? ஐ, ஔ என்ற இரட்டை உயிரெழுததுகளைக் குறறெழுததுககளோடு சோகக லாமா, நெட்டெழுததுககளோடு சேர்ககலாமா? ஏன? அபபோது எததனைக் குறறெழுததுக்கள, எததனை நெட்டெழுததுககள?

4. பன்னிரணடு உயிரெழுததுககளில வாயில ஒரே இடததில உசசரிககபபடுகிறவைகளும எழுதி னால ஏறக்குறைய ஒரே மாதிரியான வடிவததை யுடையவைகளும எவை? ஆகையால், எந்த எந்த எழுததுககள் ஒன்றுகொன்று இன மான எழுததுககள்? இவறறை இன எழுத துககள எனபது ஏன?

5. பொருள்களைச சுட்டுவிரலால், அதாவது ஆட காட்டி விரலால, காட்டிச் சொல்லககூடிய பெயாகளுககு முனனே நிறககூடிய உயிரெ ழுததுககள் எவை? சுட்டிக காட்டும் இவ்வெ ழுததுககளுககு என்ன பெயா சொல்லலாம்? இசசுட்டெழுததுககள் வார்த்தைகளுக்கு முன் வருமா, பின வருமா?

6. அக்குதிரை, அவன் என்னும் இரண்டிலும் அ என்ற சுட்டெழுதது நிறகிற மாதிரியில் ஏதாவது விததியாசம உண்டா என்று அச சுட்டெழுததை நீக்கிவிட்டால் ஒவ்வொன்றும் நிறகிற விததைப் பார்ததுச் சொலலுங்கள். ஒரு வார்ததையின புறததில, அதாவது வெளியில், நிற்கிற சுட்டுக்கு என்ன பெயர் சொல்லலாம், ஒரு வாாததையின் அகத்தில், அதாவது உள்ளே, நிறகிற சுட்டுக்கு என்ன பெயர் சொலலலாம்?
7. வேறு உதாரணஙகள் சில அகச் சுட்டுககும் புறச் சுட்டுக்கும் கொடுஙகள்.
8. வினு, அதாவது கேள்வி, கேட்க ஒரு சொல்லில் வரும் உயிரெழுததுக்கள் எவை? அநத உயிரெழுததுக்கள் அப்போது சொல்லுக்கு முதலில் வருமா கடைசியில் வருமா? வினுவாக வரும் அநத எழுததுக்களுக்கு என்ன பெயா சொல்லலாம்? அந்த வினு எழுததுக்களுளள சில சொறகளேச சொல்லுங்கள்.

## பாடம் 3.

1. மெய்யெழுததுக்கள் எப்போதுதான் ஓசை கொளளும்? மெய்யெழுததுக்கள் ஒவவொன்றேடும ஏதாவது ஒரு உயிரைச சேர்த்து உச்சரித்து ஒவ்வொரு மெய்யின் ஓசையும் எப்படியிருக்கிறதென்று பாருங்கள். வல், அதாவது வலிய ஓசையுடைய எழுத்துக்கள் இருந்தால் அவறறையும், மெல், அதாவது மெல்லிய, ஓசை

யுடைய எழுததுக்கள் இருந்தால் அவறறையும், இரண்டு ஓசைக்கும் இடை, அதாவது நடுததர மான, ஓசையுடைய எழுததுக்கள் இருந்தால் அவறறையும், சொல்லுஙகள். இந்த வல் ஓசை, மெல ஓசை, இடை ஓசை பெறற எழுததுக்க ளுக்குத தனித்தனி என்ன பெயர் வைக்கலாம்?

2. பதினெட்டு மெய்களிலும் எந்த எந்த எழுததெல் லாம் வாயில் ஒரே இடததில உணடாகின்றன; எழுதினல் எந்த எந்த எழுததுக்கள் ஏறககு றைய ஒரே வடிவமுடையன? ஒரே இடத்திற் பிறக்கிற அல்லது ஏறக்குறைய ஒரே வடி வததையுடைய உயிரெழுத்துக்களுககு என்ன பெயர் சொனனேம்? மெய் எழுததுக்களில் இன எழுத்துககள் எவை? இவறறை இன எழுததுக்கள் என்பது ஏன்?

3. ங, ஞ, ற, ர; ண, ந, ன; ல, ழ, ள; இ, யி ஆகிய இவ்வெழுததுக்கள் ஒவ்வொன்றும் பிறககிற இடஙகள எவை?

4. பின்வரும் வார்ததைகளைப் பிழையில்லாமல் உச்சரி யுஙகள —ஞாயிறு, ஞானம, அஙஙனம், எங்ங னம, அறிநதான், அறிநதான, உரு, உறு, பணி, பனி, பணை, பனை, கணம், கனம், கனி, கணி, குனி, குணி, பேன், பேண, புன, புண், ஊண், ஊன், நான், நாண், அன்னம், அண்ணம், பன்றி, பண்டி, தோன்றி, தோணடி, கல், கள, வால, வாள், வாழ, சூல், சூள, சூழ், தாழ, தால், தாள், தளை, தலை, தழை, மூளை, மூலை, மூழை, வாளை, வாலை, வாழை, உலை, உழை, உளை, கொல்ல,

கொள்ள, வெல்லம், வெள்ளம், போர்க்கலம், போர்க்களம், புலி, புளி, அவனே இருந்தான், அவனே யிருந்தான், ஞமணஞாஞணஞாணஞோ ணம்.

5. உயிர்மெய் எழுததுக்கள் எததனை? அவற்றில் ஏதாவது வார்த்தையில் சுட்டெழுத்தாக அல்லது வினவெழுத்தாக வருமா பாருங்கள். வருவதாயிருந்தால் வார்த்தையின் முதலிலா, கடைசியிலா அப்படி வருகிறது என்று சொல்லுங்கள்.

6. எஃகு என்னும் வார்த்தையில் இரண்டாம் எழுததைதத தனியாக உச்சரியுங்கள். கேடகம் என்பது என்ன? அடுப்புக்கூட்டுப்போல மூன்று குமிழ்களை யுடையதாய்த் தோலினலாவது பிரபங்கொடியினலாவது முற்காலத்தில் இந்நாட்டிற செய்யப்பட்டதாய்த தெரிகிற இநத ஆயுதம் போன்ற இந்த எழுத்திற்கு என்ன பெயர் வைக்கலாம்? இந்த எழுத்து எஙகே பிறக்கிறது?

---

## பாடம் 4.

1. ஓடி, நானியார் என்பவற்றைப் பலதரம் உச்சரித்துப்பார்த்து அவறறிலுள்ள இ சத்தம் ஒரே மாதிரியானதா, வித்தியாசமானதா என்று காரணத்தோடு சொல்லுங்கள்.

2. அப்படியே, நாடு, நடு என்பவற்றைப் பலதரம் உச்சரித்துப்பார்த்து அவற்றிலுள்ள உ சத்தம் ஒரே மாதிரியானதா, வித்தியாசமானதா என்று காரணத்தோடு சொல்லுங்கள்.

3. அப்படியே, ஐ, வலையன் என்பவற்றைப் பலதரம் உச்சரித்துப்பார்த்து அவற்றிலுள்ள ஐ சத்தம் ஒரே மாதிரியானதா, வித்தியாசமானதா என்று காரணத்தோடு சொல்லுங்கள்.
4. அப்படியே, ஔவை, ஔ என்பவற்றைப் பலதரம் உச்சரித்துப்பார்த்து அவற்றிலுள்ள ஔ சத்தம் ஒரே மாதிரியானதா, வித்தியாசமானதா என்று காரணத்தோடு சொல்லுங்கள்.
5. அப்படியே, வரும், வெறுமவாய என்பவற்றைப் பலதரம் உச்சரித்துப்பார்த்து அவற்றிலுள்ள ம் சத்தம் ஒரே மாதிரியானதா, வித்தியாச மானதா என்று காரணத்தோடு சொல்லுங்கள்.
6. அப்படியே, அஃது, அஃறிணை என்பவற்றைப் பலதரம் உச்சரித்துப்பார்த்து அவற்றிலுள்ள ஃ சத்தம் ஒரே மாதிரியானதா, வித்தியாசமானதா என்று காரணத்தோடு சொல்லுங்கள்.
7 பின்வரும் வார்த்தைகளை உச்சரித்துப்பார்த்து அவற்றில் இ, உ, ஐ, ஔ, ம், ஃ ஆகிய இந்த எழுத்துக்களின் குறுக்கங்கள் எவை, குறுக்கம் அல்லாதவைகள் எவை என்று காட்டுங்கள்:—
பாதி, பதி, அது, யாது, கதவு, இரவு, தொல்லை, ஐப்பசி, ஔவியம், வௌவால், அம்பு, போலும், மருண்ம், போனம், வளரும்வால், எஃகு, ஒன பஃது, முஃடீது.

---

## பாடம் 5.

1. ஒவ்வொரு உயிரெழுத்தையும் முதல் எழுத்தாக உடைய ஒவ்வொரு வார்த்தை சொல்லுங்கள்.

2. ஒவ்வொரு மெய்யெழுத்தையும் முதல எழுத்தாக உடைய ஒவ்வொரு வார்த்தை சொல்ல முடியுமா? ஏன்?

3. மேலே முதறபாடததிற சொன்னபடி குறுககும நெடுக்குமாகக் கோடுகளிட்டு சொல்லுக்கு முதல எழுத்தாக வரக்கூடிய உயிர்மெய் யெழுததுக களை மாததிரம் அதன் அதன் வீட்டில் எழுதி, சொல்லுக்கு முதல் எழுததாக வராத உயிர மெய் யெழுததுக்களின் வீடுகளைச் சுமமா விட்டுவிடுங்கள். (பின்வரும் வாாததைகளுும உண்டு —கௌவை, ஙனம், ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கல், தௌவை, நௌவி, பௌவம், மௌவல், யௌவனம்.)

4. முந்திய கேள்விக்காக நீஙகள் அமைதது எழுதிய வீடுகளைப்பார்த்து எநத எநத மெய்யெழுத்துக களிலிருநது உண்டான உயிர்மெய் யெழுததுக களை எல்லாம் சொறகளுக்கு முதல் எழுததாக வருவதில்லை என்று சொல்லுஙகள்.

5. அப்படியே பார்த்து ங், ஞ, ய், ர், ல், வ இம்மெய யெழுத்துக்கள் ஒவ்வொன்றிலுமிருந்து உண டான எந்த எந்த உயிர் மெய் யெழுததுக்களை மாததிரம் சொல்லுக்கு முதலில் வரும் என்று சொல்லுங்கள்.

6. சொல்லுக்கு முதலில் வரத்தக்க எழுததுக்களை யெல்லாம் வீடுகளைப்பார்தது எண்ணி இததனை என்று சொல்லுங்கள்.

7. ஆய்தவெழுத்து சொல்லுக்கு முதல எழுததாக வருமா? ஏன்?

## பாடம் 6.

1. ஒவ்வொரு மெய்யெழுத்தையும் கடைசியிலுடைய ஒவ்வொரு தனிவார்த்தை சொல்லுங்கள். (உரிஞ், பொருந், தெவ் என்ற வார்த்தைகளும் உண்டு.)

2. எந்த மெய்யெழுத்துக்கள் அம்மாதிரியாகச் சொல்லுக்குக் கடைசியில் வரும், எந்த மெய்யெழுத்துக்கள் அம்மாதிரியாகச் சொல்லுக்குக் கடைசியில் வருவதில்லை?

3. பின்வரும் வார்த்தைகளைக் கவனித்து ஒவ்வொரு மெய்யும் எந்த எந்த மெய்யிலிருந்து உண்டான உயிர்மெய் யெழுத்துக்கு முன் வருகிறது என்று சொல்லுங்கள் —வாக்கு; எங்ஙனமே, அங்கு; அச்சு; மஞ்ஞை, மஞ்சு, உரிஞ்யாது; கட்டு, உட்கு, ஆட்சி, நட்பு; அண்ணு, எண்கு, வெண்சாந்து, வெண்ஞமலி, வண்டு, பண்பு, வெண்மை, மண்யாது, மண்வலிது; பத்து; வெந்நீரை, பந்து, பொருந் யாது, துப்பு, அம்மை, நம்பு, கலம் யாது, கலம் வலிது, உய்ய, பொய்கை, கொய்சகம், எய்து, செய்நா, ஆய்ப்பு, சேய்மை, ஆய்வு, பாய்ஞெகிழி; சேர்க, வார்சிலை, சோர்துமே, சோர்நர், மார்பு, சீர்மை, ஆர்வமே, போர்யானை, நேர் ஞெகிழி; நல்ல, நல்கி, வல்சி, சால்பு, செல்வமே, கல்யாணமே; தெவ்வரை, தெவ்யாது; மூழ்க, வீழ்சிலை, வாழ்தலை, வாழ்நனை, சூழ்ப, கீழ்மை, வாழ்வு, வீழ்பானை, வாழ் ஞெண்டு; உள்ள, வெள்கி, நீள்சிலை, கொள்ப, வேள்வி, வெள

யானை; கற்று, கற்க, பயிற்சி, கற்பு; அன்னை, அன்று, நன்கு, நன்செயுமே, புன்ஞமலி, இன்பு, நன்மை, பொன்யாது, பொன்வலிது.

4. எந்த மெய்யெழுத்துக்கள் தம்மிலிருந்து உண்டாகிய உயிர்மெய்யெழுத்துக்களுக்கு முன்னே வருவதில்லை?

5. பின்வரும் வார்த்தைகளை கவனித்து எந்த எந்த மெய்யெழுத்து எந்த எந்த மெய்யெழுத்தோடு சேர்ந்து நிற்கிறதென்று சொல்லுங்கள் :—காய்க்க, வேய்ங்குழல, பாய்ச்சு, தேய்ஞ்சது, தேய்த்த, காய்ந்த, வாய்ப்பு, மொய்ம்பு, ஈர்க்கு, ஆர்ங்கோடு, உணர்ச்சி, கூர்ஞ்சிறை, போர்த்த, நேர்ந்த, கூர்ப்பு, ஈர்ம்பணை; வாழ்க்கை, பாழ்ங்கிணறு, சூழ்ச்சி, பாழ்ஞ்சுனை, வாழ்த்து, வாழ்ந்து, காழ்ப்பு, பாழ்ம்பதி.

---

## பாடம் 7.

1. போலி ரூபாய் என்றால் என்ன? ஆகையால் போலி என்னும் சொல்லுக்கு என்ன அர்த்தம்?

2. மெல்லநட என்பதற்குப் பதிலாக மெள்ள நட என்று சொல்லும்போது எந்தச் சொல்லில் எந்த எழுத்துக்குப் பதிலாக எந்த எழுத்து வந்தது? மெல்ல என்பதிலுள்ள ல்ல என்பது ள்ள ஆகமாறியதால் அச்சொல்லின் அர்த்தத்தில் ஏதாவது வித்தியாசம் உண்டா? இப்படி ஒரு சொல்லில் ஒரு எழுத்துக்குப் பதிலாக அச்சொல்லின் அர்த்தம் மாறாதபடி வேறே எழுத்து போலியாக வந்தால் அப்படிவந்த

எழுத்தை என்ன எழுத்து என்னலாம்? இங்கே எந்த எழுத்து எதற்குப் போலியாக வந்தது?

3. கவலையைத் தீர்த்தான என்பதில் வ என்னும் எழுத்து ட என்னும் எழுத்திற்குப் போலியாக வந்தது என்று சொல்லலாமா? ஏன்?

4. பின் வருபவற்றிலுள்ள எழுத்துப் போலிகளைக் காட்டி எந்த எழுத்துக்களுக்கு அவைகள் போலியாக வந்தன என்று சொல்லுங்கள்.—

(1) பல்விளக்கும்போது சாம்பர் தின்றாள்.
(2) மதிள் சூழ இலங்கை.
(3) வெயிலுக்கு இலைப்பந்தர் இட்டார்.
(4) ஞயம்பட உரை.
(5) சிறகர் முளைத்த சிற்றெறும்பு.
(6) இக்கல்லைத் தூக்க உனக்குத் திறல் இல்லை.
(7) அரைசர் கெடுதலும் உண்டு
(8) ஐயனே, என்பக்கல் வந்தருள்.
(9) இளமையிற் கல்.
(10) வழுக்கு நிலத்திற் பயச் சென்றான.
(11) வேர் நிலன் நீங்கிய மரம்போல் வீழ்ந்தான்.
(12) மரன் வாழ் மதியில்லாக் குரங்கு.
(13) பழைமையை விடார் இந்நாட்டார்.
(14) சிரைப்பேன் கொண்ட சிறியோர்.
(15) குலத்தைக் கெடுக்க வந்த கோடாலிக் காம்பு.
(16) அலையடங்காத சுடர் போல.
(17) சிலவேளை அப்படியும் உண்டு.
(18) பொன் அரைஞாண் வேண்டும்.

(19) எள் இருக்கவும் இடன் இல்லை.
(20) தின்று தின்று குடம்போலக் குடர் சரிந்தது.

5. போலி என்பது என்ன? சில வேறு உதாரணம் வேண்டும்.

---

## பாடம் 8.

1. கோ என்பதன் கடைசியிலும் ஏறுகழுதை என்பதன் முதலிலும் எவ்வகை எழுத்தின் ஒலி கேட்கிறது? கோ ஏறுகழுதை என்பவற்றைச் சேர்த்து விரைவாக உச்சரித்து அவ்வுச்சரிப்பின்படி எழுதுங்கள். அந்த இரண்டு உயிர் ஒலிக்கும் இடையில் புதிதாக வந்த ஒலி எது? அவ்வொலி எவ்வகை எழுத்தினுடையது? இரண்டு உயிர் ஒலிகளையும் உடன்படும்படி செய்கிற இந்த வ என்னும் மெய்யை என்ன மெய் என்னலாம்?

2. அவனே இவன என்னும் இரண்டு சொல்லையும் சேர்த்து விரைவாக உச்சரித்து என்ன உடன்படு மெய் வருகிறது என்று சொல்லுங்கள்.

3. விள, பலா, மணி, தீ, மடு, பூ, அவனே, மலை, நொ, கோ, கௌ என்பவை ஒவ்வொன்றோடும் அழகு என்பதைச் சேர்த்து விரைவாக உச்சரித்து எந்த எந்த உயிரொலிக்குப்பின் எந்த எந்த உடன்படு மெய்வருகிறது என்று சொல்லுங்கள்.

4. எந்த உயிரொலிக்குப் பின்னுவது சில வேளை

ளில் வகர உடன்படு மெய்யும் சில வேளைகளில் யகர உடம்படு மெய்யும் வருமா என்று ஆராய்ந்து சொல்லுங்கள்.

---

## பாடம் 9.

1. பின் இரட்டை இரட்டையாக வரும் சொற்களைச் சேர்த்து விரைவாக உச்சரித்து அவ்வுச்சரிப்பின் படி அவற்றை எழுதுங்கள் — எழுபிசைசை காய், மாதுளை பழம், மா காய், தெங்கு காய், பனை காய், விள காய், பலா காய், பூ கொடி, பூ சோலை; இரும்பு பாதை, கரும்பு கட்டி, நஞ்சு பை, ஆடு மயிர், ஆறு நீர்; வடக்கு கிழக்கு, தெற்கு கிழக்கு, மேற்கு காற்று, கிழக்கு ஊர்; ஆறு பத்து, ஏழு பதது, ஒன்று ஆயிரம், இரண்டு ஆயிரம், மூன்று ஆயிரம், நான்கு ஆயிரம், மூன்று நூறு, நான்கு காலி, நான்கு மணி, ஐந்து மூன்று, ஐந்து ஆயிரம், ஐந்து வகை, எட்டு ஆயிரம், எட்டு வகை, பத்து இரண்டு, ஒன்று ஒன்று, மூன்று மூன்று, வேறு வேறு; தச்சன் தாண்டவராயன்; நேற்று கூலி; மெய் ஞானம், கை மாறு, கை நீண்டது; வந்து போ, செய்த பையன், நீயா செய்தாய்?, நீயே செய்தாய்; தான் ஐ, யான் ஐ, நீ ஐ, நீர் ஐ, மரம் ஐ, மனம் ஐ; கனவு என, ஆடு என; நீர் குடம், நாய் கடி, தயிர் சோறு, கடலை பருப்பு; மரம் நாய், நானும் நீயும், நானும் மகனும், குளம் கரை; கண் கலக்கம், மண் நன்று, தூண் நன்று, மண்

சடடி, மண் பானை, மண் தீது; முள் முனை, கள் குடம், வாள்படை, தோள் நலம், முள் நன்று, முள் தீது; நல் நூல், நெல் முளை, நெல் பயிர், கல் அடி, கல் சுவர், நல் மரம், மேல் நின்ற, நல் துணை, நிழலில் தூங்கு, அல் திணை, பயன் நிலை, தேன் குழல், தன் கொலை, பின் நாள், குரு டன் தான், பொன் தகடு, பொன் தீது, ஈவேன் நான், எனனின நீ.

2\. பின் வருவதைத் தனிததனி வார்ததைகளாகப பிரித்து எழுதுங்கள் —துளசாபுரத்தி லிலவ ரொருதொடர்பாய்க் கலவிபயின்றோர்கள்; வள மா ரவரி லொருமூவா மநதிரததின் மிக்கமை யாற் றள மா ராசன்றனைக் கணடு தங்கள் வித தைதத திறங் காட்டி யொளி யாா தனங்கண் மிக வீட்டற குன்னி யிவனறன் மிக்ககலவி யில னெனினு நம்மோ டிருந்துபடிததவ னுதலி னு மொருபங்குதருவோ மென் றங் குட னழைத துப் புவி யா ளரசனிடைப் போகும்போ தி லந்த வழியினிடைச சவ மாரு சிஙகந்தன்னைக் கண்டு தம்மந்திரஞ் சோதிகக வெண்ணிக் கற்ற வித்தையாற் செத்த கண்டீரவத்தை யெழுப்பு வேன் மற்றையவர்க்குச் சம்மதமோ வென்ன, மந்திரங் தெரியா துறற வொருவ னெழுபபி லதுகொல்லு மென்ன வுரைத்திடலும், பற்றி யவனைத் தள்ள வவன் பயந தோர்மரததி லேறி னன். எழுப்பினர்; பின் பதுகொல்ல விறந்தா ரம்மூவரு மிதனு லிழுக்கிலாத கல்வியினு மறிவேபெரிது.

# இலக்கண ஆக்க அட்டவணை


| பாடம். | பாகம் I : பெயற்சொற்கள். | பக்கம். |
|---|---|---|
| 1. | (பொருட்) பெயர் | 1 |
| 2. | பொதுப்பெயர்—சிறப்புப்பெயர் | 2 |
| 3. | காரணப் பொதுப் பெயர்—காரணச் சிறப்புப் பெயர்—இடுகுறிப் பொதுப் பெயர்—இடுகுறிச் சிறப்புப்பெயர்— காரண இடுகுறிப் பெயர் | 3 |
| 4. | பண்புப் பெயர்—பண்புத்தொகை—இருபெயரொட்டுப் பண்புத்தொகை | 5 |
| 5. | தொழிற்பெயர்—முதனிலை—கடைநிலை—முதனிலைத் தொழிற்பெயர்—முதனிலை திரிந்த தொழிற்பெயர் | 7 |
| 6. | வினையாலணையும்பெயர்—பகுதி—விகுதி | 9 |
| 7. | வாக்கியம்—எழுவாய்—பயனிலை—தோன்றா எழுவாய் | 10 |
| 8. | ஆகுபெயர் | 12 |
| 9. | திணை : உயர்திணை—அஃறிணை | 14 |
| 10. | திணைவழுவமைதி | 16 |
| 11. | பால் : ஆண்பால்—பெண்பால்—பலர்பால்—ஒன்றன்பால் — பலவின்பால் — ஒருமைப் பால்கள்—பன்மைப்பால்கள் | 17 |
| 12. | பால்வழுவமைதி | 20 |
| 13. | இடம் : தன்மை—முன்னிலை—படர்க்கை—வினையாலணையும் பெயர், தொழிற் பெயர் இவற்றின் இடம் | 21 |
| 14. | இடவழுவமைதி | 22 |
| 15. | வேற்றுமை | 24 |

| பாடம். | | பக்கம். |
|---|---|---|
| 16. | இரண்டாம் வேற்றுமை உருபும் பொருளும் | 26 |
| 17. | மூன்றாம் ,, ,, ,, | 27 |
| 18. | நான்காம ,, ,, ,, | 28 |
| 19. | ஐந்தாம ,, ,, ,, .. | 30 |
| 20. | ஆறாம் ,, ,, ,, . | 31 |
| 21. | ஏழாம் ,, ,, ,, . | 31 |
| 22. | எட்டாம் வேற்றுமை சேய்மை விளி--அண்மை விளி .. | 33 |
| 23. | பொருள மயக்கம்—உருபு மயக்கம ... | 35 |
| 24. | வேற்றுமைத தொகைகள . | 38 |

பாகம் II விளைச்சொறகள்.

| | | |
|---|---|---|
| 1. | வினை . முற்று—எச்சம—வினைப்பகுதி . | 42 |
| 2. | வினை-முற்று தெரிநிலை—குறிப்பு . | 43 |
| 3. | தெரிநிலை பெயரெச்சம்—வினையெச்சம் .. | 45 |
| 4. | குறிப்பு . பெயரெச்சம்—வினையெச்சம் | 48 |
| 5. | முற்றெச்சம் .. | 51 |
| 6. | தன் வினை—பிறவினை .. | 52 |
| 7. | செயப்படு பொருள் : குன்றாவினை—குன்றிய வினை—செய்வினை—செயப்பாட்டு வினை ... | 54 |
| 8. | உடன்பாட்டு வினை—எதிர் மறை வினை . | 57 |
| 9. | தன்மை வினை முற்று—முன்னிலை வினை முற்று | 58 |
| 10. | வியங்கோள் வினை முற்று ... | 60 |
| 11. | காலம் : இறந்த நிகழ் எதிர்காலங்கள்--காலங் காட்டல் : இடை நிலை—விகுதி—பகுதி மெய் இரட்டித்து . | 61 |
| 12. | வினைத் தொகை .. | 64 |
| 13. | கால வழுவமைதி .. | 65 |
| 14. | பெயர்களுக்கும் வினைகளுக்கும்வித்தியாசம்—காலங்காட்டும் பெயர்கள் — இருதிணைப் | |

பெயர் வினைகள்—மூவிடத்துக்கும் பொது முற்றுக்கள் — எழுவாய் பயனிலைகளின் இடங்கள்.

## பாகம் III இடைச்சொற்கள்.

1. இடைச்சொல் . 69
2 ஏகாரப் பொருள்கள் 70
3. ஓகாரப் பொருள்கள் 72
4 உம்மையின் பொருள்கள்—உம்மைத் தொகை 73
5. ஏ, ஓ, உம், கொல் இவற்றைப் பற்றிய பயிற்சி. 75

## பாகம் IV எழுத்துக்கள்.

1 எழுத்துக்கள் உயிர், மெய், உயிர்மெய் . 77
2. குற்றெழுத்துக்கள் — நெட்டெழுத்துக்கள்— இனவெழுத்துக்கள்—சுட்டெழுத்துக்கள்— அகச்சுட்டு—புறச்சுட்டு — வினாவெழுத்துக்கள் ... 78
3 வல்லெழுத்துக்கள் — மெல்லெழுத்துக்கள்— இடையெழுத்துக்கள்— இனவெழுத்துக்கள் — வினாவெழுத்துக்கள் — ஆய்தவெழுத்து 80
4 இ, உ, ஐ, ஔ, ம், ஃ இவற்றின் குறுக்கம் ... 83
5 சொல்லுக்கு முதல் வரும் எழுத்துக்கள் ... 84
6 சொல்லுக்குக் கடைசியில் வரும் எழுத்துக்கள்—எந்தஎந்தமெய் எந்தஎந்த உயிர் மெய்யின் முன்வரும்—எந்தஎந்தமெய் எந்தஎந்த மெய்யின் முன்வரும் ... 85
7 போலி எழுத்துக்கள் .. 86
8. உடன்படு மெய்கள் ... 88
9 சந்தி ... 89